Registered as a NewsPaper
இலவச பிரதி
விலை ரூபா:-10

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-10 | 26-09-2005 | திங்கட்கிழமை | ஓசை-221


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பிடித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225937
(சி-12760)

# யாழ்.பொங்குதமிழ் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட படையினர் முயற்சி!

## காரைநகருக்கு பிரச்சாரத்திற்குச்சென்ற பல்கலை மாணவர் திருப்பி அனுப்பப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

*யாழ். பொங்குதமிழ் – 2005 எழுச்சி நிகழ்வுக்கு முட்டுக்கட்டை போட்டுக் குழப்பும் முயற்சியில் சிறிலங்கா படைத்தரப்பு ஈடுபட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை பொங்குதமிழ் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுவிட்டு யாழ். திரும்பிய பல்கலைக்கழகமாணவனை முகமாலையில் வைத்து படையினர் கைது செய்ய முயன்றனர். இதனைத்தொடர்ந்து நேற்று காரைநகரில் பிரச்சாரப்பணியில் ஈடுபடச்சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்களை சிறிலங்காப் பொலிசார் திருப்பியனுப்பியுள்ளனர்.*

எதிர்வரும் 30ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படவுள்ள பொங்கு தமிழ்-2005 எழுச்சி நிகழ்வுக்காக மக்களை அணிதிரட்டும் பிரச்சாரப்பணிகள் யாழ் குடா நாடெங்கிலும் இடம் பெற்று வரு கின்றன.

அந்த அடிப்படையில் நேற்றைய தினம் காலை 9.45 மணியளவில் காரைநகருக்கு பொங்கு தமிழ்ப்பிரச்சாரத்திற்காகச் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை காரை நகரில் உள்ள ஈ.பி.டி.பியினரின் அலுவலகத்திற்கு சமீபமாக வைத்து வழிமறித்த சிறிலங்காப்பொலிசார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் சங்கர் நினைவாக இன்று தூபி திறந்து வைப்பு

கேணல் சங்கர் அவர்களின் நினைவாக இன்று முத்துஐயன்கட்டு ஜீவநகர் கிராமத்தில் நினைவுத்தூபி ஒன்றுதிறந்து வைக்கப்படவுள்ளது. அவரின் நான்காமாண்டு நினைவுநாளான இன்று முத்துஐயன்கட்டு தேசிய எழுச்சிப் பேரவையினால் இந்நினைவுத்தூபி பிற்பகல் 4.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

## வவு.தேசிய எழுச்சி நாளுக்கு செயலணி அமைப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் ஒக்ரோபர் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சி நாள் ஏற்பாடுகளை செய்வதற்கானசெயலணி ஒன்று நேற்று அமைக்கப்பட்டுள்ளது.நேற்றுக் காலை 10.00 மணிக்கு வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்ஒன்றின் போதே இச் செயலணி அமைக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரம் பாணாவெட்டியில் படையினர் புதைத்த பெட்டியால் பரபரப்பு

### –மக்களிடம் பீதியை ஏற்படுத்த முயற்சி?

சுழிபுரம் பாணாவெட்டிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் புதைத்துச் சென்ற பெரிய பெட்டி ஒன்றினால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நேற்று இடம்பெற்ற இப் பரபரப்புச் சம்பவம் பற்றி மேலும்தெரிய வருவதாவது,

நேற்று அதிகாலை இராணுவத் துருப்புக்காவி வாகனம் ஒன்றில் வந்திறங்கிய படையினர் பாணாவெட்டி

(12 ஆம் பக்கம் பார்க்க)


## கனடாவில் வாகனத்தால் மோதி சகோதரர்கள் இருவர் கொலை

வல்வெட்டித்துறை வரலாற்று ஆவணக்காப்பகத்தை நடத்தி வந்த நகுலசிகாமணியின் இரு புதல்வர்களும் கனடாவில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

நகுலசிகாமணியின் மூத்தமகன் சந்திரசேகர் (வயது-21), இளையவர் சௌமியன் (வயது19 ) ஆகியோரில் வோட்டலூ கலைக்கழகத்தில் சந்திரசேகர் வேதியியல் பொறியியலில் மூன்றவது ஆண்டு படித்து வருகின்றார். ரொரன்ரோவில் இருந்து 75கிலோமீற்றர் தொலைவில்

(12 ஆம் பக்கம் பார்க்க)





## லெப்.கேணல் பிறையாளனின் வித்துடல் நேற்று விதைப்பு

நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக சாவடைந்த லெப் கேணல் சுட்டா / பிறையாளன் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## இணைத் தலைமை நாடுகள் பட்டியலில் இந்தியாவை இணைக்க முயற்சி!

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைநாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணையவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

டோக்கியோவில் 2003 ஆம்ஆண்டு யூன் மாதம் நடைபெற்ற மாநாட்டிற்குப் பிறகு அமெரிக்கா,ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம்,நோர்வே ஆகிய நாடுகளைக் கொண்டு இணைத் தலைமை நாடுகள் உருவாக்கப்பட்டது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் இந்தியாவையும் இந்த இணைத் தலைமை நாடுகள் பட்டியலில் இணைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தன. இந்நிலையில் கடந்த வாரம் நியூயோர்க்கில் நடைபெற்ற இணைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகம் எங்கும் இன்று திலீபனின் இறுதி நினைவு நாள் நிகழ்வுகள்

### மக்கள் உணர்வுபூர்வ ஏற்பாடுகள்

(அலுவலக செய்தியாளர்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் இன்று காலை 8.00 மணிக்கு தியாகி திலீபனின் திருவுருவப்படம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து ஏ-9 பிரதான வீதி வழியாக ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை வளாகத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் வைக்கப்பட்டு உண்ணாநோன்பும் நினைவுரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அதேபோன்று மாலை நிகழ்வுகள் இன்று மாலை 6.00

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் சமாதான முயற்சிகள் வழமைபோல தொடரும்

### –நோர்வேயில் எரிக்சூல்ஹெய்ம் தெரிவிப்பு

நோர்வேயில் தொழில் கட்சி ஆட்சியை பொறுப்பேற்றுள்ள பொழுதிலும், இலங்கை சமாதான நடவடிக்கைகள் வழமைபோல தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கையில் முக்கிய பங்காற்றும் எரிக் சூல்ஹெய்ம் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடத்திய ஊடகவியலாளர் மாநாடொன்றில் இதனை உறுதி செய்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

மரணம் ஒரு தடவைதான் வரும். அதற்காக மானத்தை விற்றுச் சீவிக்கமுடியுமா? இறப்பிற்குப் பயந்து இனத்தை அழியவிட முடியுமா?

தியாகி லெப்.கேணல் திலீபன்



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 19.06.1980 — **மறைவு** 26-09-2000

# 2 ஆம் லெப்.பவாலி

**(விஸ்வநாதன் சதீஸ்குமார்)**

**சிறப்பு எல்லைப்படை மாவீரர்**

பவாலி நீ எம்மை விட்டுப் பிரிந்து
ஐந்து ஆண்டுகள் ஆனாலும் உன்
நினைவு எம்மை விட்டு அகலாது-ஐயா
உன் பூ முகம் பார்க்கத் துடிக்குதையா
எம் இதயம். நாம் உம்மை மறப்பது என்பது
எம்மை மரணம் வந்து தழுவும் போது
அது நிகழும்.


உம் பிரிவால் வாடும்
உன் அன்பு உள்ளங்கள்
அப்பா, அம்மா, அக்கா,அத்தான்,
அண்ணா,அண்ணி,தங்கைமார்கள்,
தம்பிமார்கள்,மருமக்கள்

*த. முகவரி: –*
*தேராவில்,*
*விஸ்வமடு.*
(6734)

தகவல்:-
**விஸ்வநாதன்(தந்தை)**

## 9ஆம் ஆண்டு நினைவு

தாயின் மடியில் 28-01-1975



தாயக மண்ணில் 26-09-1996

# கப்டன் செம்பியன்/ சுபேந்திரன்

**(ஆறுமுகம் - பாஸ்கரன்)**

*தானைத் தலைவனின் அணியில்*
*தன்னையும் ஒருவனாய் இணைத்து*
*செம்பியன் என்னும் பெயர் எடுத்து*
*செங்களங்கள் பல கண்டாய்.*
*சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் இணைந்து*
*சாதனைகள் பல கண்டு*
*சத்ஜெய மூன்றில் சரித்திரம் ஆகிவிட்டாய்.*
*ஆண்டுகள் பல சென்றும்*
*ஆறுமா எம் இதயங்கள்.*

*உன்னோடு அந்நாளில் உயிர் மடிந்தஅனைத்து மாவீர்களையும் இந்நாளில் நாம்நினைவு கூருகின்றோம்.*

**உன் நினைவில் என்றும்**
**தாய்**
**சகோதரர்கள்.**

**இல-2 1/1 சிவநகர்,**
**உருத்திரபுரம்**
**கிளிநொச்சி.** (6729)

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



**தாயின்மடியில்** 11-04-1973 — **தாயகமண்ணில்** 26-09-1996

# லெப். கௌரிதேவி

**(குணரத்தினம் சந்திரவதனி)**

*நாகேந்திரபுரம், புளியம்பொக்கணை*

தாய் மண்ணின் விடிவிற்காய்
தாய் மடியில் தவழ்ந்தவளே
பெருந்துயரம் கொள்ளவைத்து
கௌரி எங்கே சென்றாய்
கல்லறையில் துயிலுகின்ற
கண்ணின் மணியே கௌரிதேவி
ஒன்பதாண்டு சென்றாலும்
ஓங்கி நிற்கும் உன்நினைவை

26.09.1996 அன்று வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம். உற்றார்,உறவினர்,போராளிகள் அனைவரையும் (26.09.2005) இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கோட்டுக்கொள்கின்றோம்.

*முகவரி: – தம்பிப்பிள்ளை*
*குணரத்தினம்.சந்திரகாந்தன்*
*நாகேந்திரபுரம்*
*புளியம்பொக்கணை*

தகவல்:-
**குடும்பத்தினர்**
(சி-12875)



# றீற்றா சூறாவளியால் பல்லாயிரம் வீடுகள் சேதம் மின் கம்பங்கள், மரங்கள் சரிந்து வீழ்ந்தன

(நியூஓர்லியன்ஸ்)

**அமெரிக்காவின் டெக்சாஸ் மற்றும் லூசியானா மாகாணங்களை நேற்று முன்தினம் தாக்கிய றீற்றா சூறாவளியால் அப் பகுதியில் பல்லாயிரம் வீடுகள் இடிந்து தரை மட்டமாகியதுடன் மின் கம்பங்கள், மரங்கள் அடியோடு பாறி விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது இதனால் பல பில்லியன் ரூபா சொத்தழிவும் ஏற்பட்டுள்ளது.**


அமெரிக்காவின் புளோரிடா, லூசியானா, அலபாமா, மிசிசிப்பி ஆகிய மாகாணங்களை கத்ரினா சூறாவளி கடந்த மாதம் தாக்கியதில் பெருத்த சேதம் ஏற்பட்டது. இதில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இந்நிலையில் டெக்சாஸ், மற்றும் லூசியானா மாகாணங்களை 'றீற்றா' என்ற மற்றொரு சூறாவளி நேற்று முன்தினம் தாக்கியது. மணிக்கு 200 கி.மீ வேகத்தில் சுழன்று அடித்த காற்றிலும் பலத்த மழையிலும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரை மட்டமானது. சூறாவளி இந்த மாகாணங்களின் கடலோரப் பகுதியை கடந்த போது மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன. ஏராளமான நகரங்கள் இருளில் மூழ்கின.

ஏற்கனவே கடல் நீர் புகுந்து வெள்ளத்தில் தத்தளித்த நியூஓர்லியன்ஸ் நகரை இராட்சத அலைகள் தாக்கின.

றீற்றா சூறாவளி தாக்கியதில் டெக்சாஸ், லூசியான மாகாணங்களில் ரூ.23 ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் கத்ரினா சூறாவளி தாக்கியபோது ஏராள மானவர்கள் உயிர் இழந்தனர். இப்போது உயிர்ச் சேதம் அதிகம் ஏற்படவில்லை.

மீட்பு பணிகள் இப்போது முழு வீச்சில் நடைபெற்று வருகிறன. டெக்சாஸ் மாநிலத்தில் வீடுகளை விட்டு பொதுமக்கள் வெளியே வர வேண்டாம். வெள்ள அபாயம் இன்னும் முழுமையாக நீங்கவில்லை என்று மாகாண நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.





நேற்று முன்தினம் அமெரிக்காவின் டெக்சாஸை கரையைஅரீற்றா சூறாவளி தாக்கியதுடன் அங்கு ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் வெளி றோ துறைமுகத்தில் பாதிப்புற்ற எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அவதானிக்கும் தொழிலாளர்கள்.

## றீற்றாவை விட கத்ரினா சேதம் அதிகம்

(நியூயோர்க்)

கத்ரினா சூறாவளியால் காப்புறுதி செய்யப்பட்டிருந்த பொருட்களின் மதிப்பை விட றீற்றாவால் ஏற்பட்ட சேதம் குறைவு என்று நியூயோர்க்கை சேர்ந்த காப்புறுதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. றீற்றா சூறாவளியால் மூன்று முதல் ஆறு பில்லியன் டொலர் வரையில் சேதம் அடைந்திருக்கலாம் என்றும் கத்ரினாவால் 40 பில்லியன் டொலர் முதல் 60 பில்லியன் டொலர் வரையிலான சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.



றீற்றா சூறாவளியின் சீற்றத்தை தொலைக்காட்சியில் நேரடியாக அவதானிக்கும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்

## பசுபிக் கடலில் புயல் மையம் ஜப்பானை நோக்கி நகர்வு

(டோக்கியோ)

பசுபிக் கடலில் புயல் சின்னம் உருவாகி இருக்கிறது. இது ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இருந்து 900 கிலோ மீற்றர் தொலைவில் மையம்கொண்டுள்ளது. அது வடக்கு திசையில் நகர்ந்து ஜப்பானில் உள்ள தெற்குத் தீவுகளைத் தாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புயல் மணிக்கு 144 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் என்றும் இதன் காரணமாக தலைநகர் டோக்கியோ உட்பட ஜப்பான் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்யும் என்றும் வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

இந்த மாதம் தொடக்கத்தில் நாபி என்ற புயல் வீசியதில் 20 இற்கும் மேற்பட்டோர் பலியானார்கள். தற்போது புதிய சூறாவளி ஜப்பானை அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறது.



றீற்றா சூறாவளியினால் கட்டடத்தின் மேற்... கூரை சிதைவடைந்திருக்கும் காட்சி.

## அமெரிக்க கோபுரங்களில் மோதி ஆண்டு தோறும் பத்துக்கோடி பறவைகள் பலி

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வானளாவிய கட்டடங்கள் ஏராளம் உள்ளன. கிறிஸ்லர் கோபுரம் ராக் பெல்லர் சென்டர், மோர்கான் ஸ்டான்லி கோபுரம், போன்ற உயரமான கட்டடங்கள் நள்ளிரவில் வர்ண விளக்குகளால் ஜொலிப்பதை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் பார்த்து இரசிக்கிறார்கள்.

ஆனால் இந்த வாரம் முதல் ஒக்ரோபர் இறுதி வரையிலும், ஏப்ரல் முதல் மே மாத இறுதி வரையிலும் இந்த வர்ண விளக்குகளை எரிய விடுவதில்லை என முடிவு எடுத்திருக்கிறார்கள்.

வெளிநாட்டு அபூர்வ பறவைகள் பருவ காலங்கள் மாறும் போது இடம்பெயர்ந்து செல்கின்றன. அந்தப் பறவைகள் பறந்து செல்லும் போது வர்ண விளக்குகளால் கவரப்பட்டு இந்த உயரமான கோபுரங்கள் மீது மோதி இறந்து விடுகின்றன.

ஆண்டு தோறும் இப்படி பத்துக்கோடி பறவைகள் பலியாகி விடுகின்றன.

விலங்குகள் பாதுகாப்பு சங்கங்கள் மேற் கொண்ட முயற்சியின் பயனாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் ஏவுகணைத்திட்டம் இந்தியாவை விட மிகவும் நவீனமானது-பாக். இராணுவத் தளபதி

(டுபாய்)


"இந்தியாவை விட பாகிஸ்தான் ஏவுகணைத் திட்டம் மிகவும் நவீனமானது" என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸை சேர்ந்த நிருபர்கள் சமீபத்தில் பாகிஸ்தான் இராணுவ உயரதிகாரியும், ஓய்வு பெற்ற தளபதியுமான தாரிக் வாசிம் காஸியை சந்தித்து பேட்டி கண்டனர். அப்போது பாகிஸ்தான் தளபதி கூறியதாவது:-

பாகிஸ்தான் தயாரிக்கும் ஏவுகணைகள் திறன் மிக்கது. நம்பகத்தன்மை கொண்டவை. இந்தியாவை விட பாகிஸ்தானின் ஏவுகணைத் திட்டம் மிகவும் நவீனமயமானது. அணு உலைகள் தீவிர கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. தீவிரவாதிகளின் கைகளுக்கு போகாமல் பாதுகாக்கப்படுகிறது.

அமெரிக்காவிடம் இருந்து 'ஏ-16' ரக இரண்டு போர் விமானங்களை இந்த ஆண்டு இறுதிக்குள் வாங்க இருக்கிறோம். அத்தோடு சீன- பாகிஸ்தான் கூட்டு ஒத்துழைப்புடன் புதிய போர் விமானம் உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

பாகிஸ்தான் உருவாக்கிய முதல் நீர் மூழ்கிக் கப்பல் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டாவது நீர் மூழ்கிக் கப்பல் பரிசோதிக்கப்பட்டு வருகின்றது . கராச்சியில் மூன்றாவது நீர் மூழ்கிக் கப்பலின் கட்டுமான பணி நடந்து கொண்டிருக்கிறது. ஆப்கானிஸ்தான் எல்லையில் எந்தவித பிரச்சினையும் இல்லை என்ற போதிலும் தீவிரவாதிகளை வேட்டையாடுவதற்காக அமெரிக்கப்படையை பாகிஸ்தானுக்குள் நுழைய அனுமதிக்க மாட்டோமென அவர் கூறினார்.




பாக்தாத்துக்கு 110 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள றமாடி நகரில் நடந்த தற்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான மூன்று சகோதரர்களின் உடல்கள் வைக்கப்பட்டிருக்கும் வைத்திய சாலை முன்பாக கதறியழும் உறவினர்கள்

## ஈராக்கில் உள்ள பிரிட்டிஷ் படைகள் அடுத்த மே மாதம் முதல் வெளியேறும்

(லண்டன்)

ஈராக்கில் இருக்கும் பிரிட்டிஷ் படைகள் அடுத்த மே மாதம் முதல் வெளியேற ஆரம்பிக்கும் என்றும் அதற்கான திட்ட நகல் ஈராக் பாராளுமன்றில் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஒக்ஸேபர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்திக்கு டொனி பிளேயரின் அரசு மறுப்பு ஏதுவும் தெரிவிக்க வில்லை. சமீபத்தில் பஸ்ரா சிறையில் இரண்டு பிரிட்டிஷ் படையினர் சிறைவைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதில் இருந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



வடக்கு காஸாமுனைப் பிரதேசத்தில் யுத்த டாங்கிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் இஸ்ரேல் படைவீரர்

## இஸ்ரேல்-பலஸ்தீன மோதல் ஐ.நா.செயலாளர் கவலை தெரிவிப்பு

(நியூயோர்க்)

கடந்த இரண்டு நாட்களாக காஸாப் பகுதியில் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்குமிடையே நடந்து வரும் சண்டை குறித்து ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் கவலை தெரிவித்துள்ளார்.

காஸாப் பகுதி மற்றும் வடக்கு மேற்குக் கரைப் பகுதியில் இருந்து இஸ்ரேல் திரும்பும் நடவடிக்கையை இது பாதிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பாக்.பேருந்து விபத்து 39 பேர் பலி; 100இற்கு மேல் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானின் கராச்சி நகரிலிருந்து ஒரு மத விழாவிற்கு பேருந்தில் சென்று கொண்டிருந்த போது அப் பேருந்து விபத்திற்குள்ளானதில் அதில் பயணம் செய்த 39 பேர் பலியாகினர், இதன் போது நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மன்னாரில் எழுச்சிப் பிரகடன மாநாட்டுக்கு ஏழு செயலணிக் குழுக்களும் துரித செயற்பாடு

(மன்னார்)

**மன்னாரில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டரங்கில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்காக மன்னார் மாவட்டத்தில் ஏழு செயலணிக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.**

மடு, முசலி, நானாட்டான், விடத்தல்தீவு, வெள் ளாங்குளம், மன்னார், பேசாலை ஆகிய பிரதேசங்களிலுள்ள குழுக் கள் இதற்கான சகல ஏற்பாடுகளை யும் வெகுசிறப்பாக மேற்கொண்டு வருகின்றன.

அத்துடன் மாவட்ட மட்டக் குழு வின் தலைவர் செயலாளர் அவர்களு டன் இணைந்து சகல ஏற்பாடுகளை யும் மேற்கொண்டு வருவதோடு, சகல அரச,அரசசார்பற்ற நிறுவனம், தனி யார் பூங்கா, பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் ஆர்வமு டன் மாநாட்டிற்குரிய முன்னேற்பாடு களை மேற்கொண்டு வருகின்றனர்.(18)

## முல்லை, வலய ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திக் கலந்துரையாடல்

முல்லைத்தீவு வலய ஆசிரியர் களுக்கான வாண்மை விருத்தி கருத்தரங்கு கடந்த புதன்கிழமை காலை 8.30 மணிக்கு புதுக்குடி யிருப்பு வலயக் கல்விப்பணிமனை யில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. சிவராசா தலைமையில் ஆரம்ப மானது.

மங்கல விளக்கினை மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம், கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, ஆசிரிய ஆலோசகர் இ.செல்வநாயகம் ஆகியோர் ஏற்றி னார்கள்.

தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி னார்.

வலயக் கொடியினை பிரதிக் கல் விப் பணிப்பாளர் நாகரத்தினம் ஏற்றி னார்.

தொடர்ந்து கருத்துரைகளை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், மாகா ணக் கல்விப் பணிப்பாளர் விசாக லிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பேரின்பநாயகம் ஆகியோர் வழங் கினர். இதில் 250 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (20)

## மட்டு-பின்தங்கிய பகுதி மாணவருக்கு காலணிகள் விநியோகம்

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் லண்டனில் வதியும் டாக்டர் எஸ்.ஜெகராசாவின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு புழுத்தொற்றுகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் காலணிகளையும் பற் சுகாதார மேம்பாட்டுக்கென பற்பசை, பற்தூரிகை (பிறஸ்) என்பன கடந்த திங்கட்கிழமையன்று பாடசாலை ரீதியாக வழங்கப்பட்டன.

புழுத்தொற்றுக்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் 5940 மாண வர்களுக்கு காலணிக்களும், மாணவர் மத்தியில் பற்சுகாதாரத்தினை மேம் படுத்தும் வகையில் 9850 மாணவர்களுக்கு பற்பசைகளும், பற்தூரிகைகள் (பிறஸ்) என்பன வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சுகாதாரத் தொண்டர் பயிலுனர்களுக்கு இரண்டு நாட்கள் பயிற்சி வகுப்பு

(முல்லை)

கிராமங்களில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றும் பயிலுனர் களுக்கான சேவையை ஊக்குவிக்கும் பயிற்சி வகுப்பு கடந்த வெள்ளி காலை 9.00மணிக்கு முல்லை.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

வேள்ட்விசன் நிறுவன நிதியுதவியில் நடைபெற்ற இரண்டு நாட்கள் பயிற்சி நெறியில் வளவாளர்களாக முல்லை. மாவட்ட பிரதி மாகாண சுகா தார சேவைப்பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா, சிரேஷ்ட சுகாதார சகோதரி, மேற்பார்வை மருத்துவமாது திருமதி. தியாகராஜா, தாய்சேய் நல மருத்துவ வைத்திய கலாநிதி சுதர்சன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கியுள்ளனர்.

இதில் முல்லை. மாவட்டத்திலுள்ள அனைத்து சுகாதாரத் தொண்டகளும் கலந்து கொண்டனர்.

வேள்ட்விசன் நிறுவன சுகாதார போசாக்குத்திட்ட கண்காணிப்பாளர் தலைமையில் மேற்படி நிகழ்வுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## போரில் வாழ்விடங்களை இழந்தோருக்கு வீடமைக்க உதவி

### முல்லையில் கலந்துரையாடல்

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின் போது தமது வாழ்விடங் களை இழந்த மக்களுக்கான வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் தொடர் பான வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தினின் சிறப்புக் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை முல்லை. அரச அதிபர் பணிமனை யில் நடைபெற்றது.

பிற்பகல் 3.30 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் முல்லை. அரச அதிபர் தலைமையில் ஆரம்பமான கலந்து ரையாடலில் வடகிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டப் பணிப்பாளர் பத்ம நாதன் திட்டம் தொடர்பான விளக்கத் தினை அளித்தார். இதன் போது தலா இரண்டரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்த வீடமைப் புத் திட்டத்தின் நிதி ஒவ்வொரு கட் டம் கட்டமாகவே இலங்கை வங்கி யினூடாக வழங்கப்பட்டு வருமென வும் அதனை பிரதேச உதவி அரச அதிபர்கள் மேற்பார்வை செய்ய வேண்டு மெனவும் தெரிவித்தார்.

நிகழ்வில் முல்லை.மாவட்ட தமி ழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி, தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை. மாவட்ட பணிப்பாளர் மூர்த்தி, முல்லை மாவட்ட வடகிழக்கு வீட மைப்பு மீள் நிர்மாணத்திட்டப் பணிப் பாளர், பணியாளர்கள், உதவி அரச அதிபர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

## பரிசளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

விசுவமடு தமிழ்த்தேசிய எழுச்சி செயலணிக்குழுவினரால் கடந்த 18ஆம் திகதியன்று விசுவமடு மாட்டுவண்டித்திடலில் லெப். கேணல் திலீபன் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட மாட்டுவண்டிச்சவாரி யில் வெற்றிபெற்றோருக்கான பரி சில்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

இன்று மாலை தருமபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் திலீபன் ஞாபகார்த்த நிகழ்வில் வைத்து மேற்படி பரிசில்கள் வழங்கப்படு மென விசுவமடு தமிழ்தேசிய எழுச்சி செயலணிக் குழுவினர் தெரிவித்துள் ளனர். (சோ)

## மூன்று முறிப்பு, நட்டாங்கண்டல் வீதிகள் புனரமைப்பு

(மல்லாவி செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நட்டாங்கண்டல் மூன்று முறிப்பு வீதிகளை வீதி அபிவிருத்தி திணைக்களத்தினா 21 இலட்சம் ரூபாய் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்து வருகின்றனர். இதன் போது நட்டாங்கண்டல் பனங்காமம், மூன்று முறிப்பு வீதிகளைப் புனரமைத்து வருகின்றனர்.முன்பு இவ்வீதிகள் குன்று குழிகள் நிறைந்து காணப்பட்ட இவ்வீதிகளால் மக்கள் பயணம் செய்தபோது பல இடர்களைச் சந்தித்து வந்தனர். (24)

## புதுக்காடு மருதங்கேணி வீதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிற்கு மின்சாரம் வழங்குவதற்கான மின்கம்பங்கள் நாட்டப்படுவதற்கான ஆரம்ப வேலைகள் புதுக்காடு-மருதங்கேணி வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் படி மின்கம்பங்கள் கொண்டு வந்து பறிக்கப்பட்டு ள்ளதுடன் அவைகளை நடுவதற்கான கிடங்குகளும் வெட்டப்பட்டுள்ளன. மருதங்கேணி வைத்தியசாலை வரை முதல் கட்டமாக இம் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (11)




**15.09.2005**
**21.09.2005**

### 15

☐ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் தற் கொலை குண்டுதாரி நடத்திய தாக்குதலில் 23 ஈராக்கியர் கொல்லப்பட்டனர்.



☐ தென் சீன தொடர்பட்டாசு தொழிற் சாலைகளில் ஏற்பட்ட வெடிவிபத்துக்களில் சிக்கி 13 பேர் பலி.

☐ இந்தோனேஷிய மாகாணமான ஆஷேயில் கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங் களைக் கையளிக்கும் நிகழ்வு ஆரம்பம்.



### 16

☐ நேபாளத்தில் செய்திப் பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அகற்றக் கோரி பேரணி நடத்த திட்டமிட்டிருந்த 87 பத்திரிகையாளர்கள் அந்நாட்டுப் பொலிசாரால் கைது.

☐ லெபனானின் தலைநகர் பெய்ரூட்டை அடுத்துள்ள கிறிஸ்தவ மக்கள் வாழும் பகுதி யில் கார்க்குண்டொன்று வெடித்ததில் ஒருவர் பலி, 23 பேர் காயம்.

### 17

☐ ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே சக்தி வாய்ந்த கார்க்குண்டொன்று வெடித்ததில் 30 பேர் பலி, 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்.

☐ முஸ்லிம் நாடுகளில் சீர்திருத்தம் கொண்டுவரப்படுவதை ஆதரிக்கும் சனாதிபதி முஷாரப் அமெரிக்க யூத காங்கிரஸ் தலைவர் களை நியூயோர்க் ஹோட்டல் ஒன்றில் சந்தித்துப் பேசினார்.

### 18

☐ அரசியல் வன்முறைகள் தொடரும் ஆப் கானிஸ்தானில் முப்பது வருடங்களின் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.



☐ ஈராக்கிய பாராளுமன்ற உறுப்பினர் பாரிஸ் நஸீர் ஹுஸைன் தீவிரவாதிகளால் சுட்டுக் கொலை.

☐ ஜேர்மனியில் பாராளுமன்றத் தேர்தல் இடம் பெற்றது. இதில் அஞ்சலா மேர்கெல்லின் தலைமையிலான பழைமைவாதிகள் கட்சி வெற்றி.

### 19

☐ நேபாளத்திலுள்ள உயர் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 12 ஆசிரியர்கள் நேபாள மாவோ கெரில்லாக்களினால் கடத்தல்.

### 20

☐ இஸ்ரேலுக்குச் சென்று குடியேறுவதற்கு அளிக்கப்பட்ட உறுதி மொழி நடைமுறைப் படுத்தப்படாமல் தாமதிக்கப்படுவதாகக் குற்றஞ் சாட்டி அடிஸ் அபாபாவில் நூற்றுக்கணக்கான யூதவம்சாவளி எதியோப்பியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.


☐ ஈராக்கில் இடம்பெற்ற குண்டுவெடிப் பில் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்கள பாதுகாப்பு அதிகாரி ஒருவர் உட்பட ஒன்பது அமெரிக்கர்கள் பலி.

### 21

☐ ஆந்திராவில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் நூற்றுக்கு மேற் பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. 75 பேர் பலியாகினர்.

☐ ஜப்பான் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் பிரதமர் கொய்சுமி தலைமையி லான அரசியற் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியதையடுத்து ஜுனி சிரோ கொய்சுமி மீண்டும் பிரதமராகப் பதவி யேற்றார்.

☐ அமெரிக்காவின் புளோரிடாவின் தாழ்நிலப்பகுதிகளை "ரீற்றா" எனும் சூறா வளி தாக்கக்கூடும் எனக்கருதி கற்றினா சூறாவளி தாக்கிய பகுதியிலிருந்து 20 இலட்சம் மக்கள் வெளியேற்றம்.



# விடுதலை வேள்வியில் ஒரு வடிவம்
# தியாகி லெப். கேணல் திலீபன்

தாயக விடுதலைப் போரில் தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் எவ்வாறானவர்கள் என்பதை காலத்திற்குக் காலம் நிரூபித்து வந்துள்ளனர். நிரூபித்தும் வருகின்றனர். இருந்த போதிலும் தியாகி லெப்.கேணல் திலீபனின் தியாகப் பயணம் வித்தியாசமானது.

உறங்கிக் கிடந்த தமிழினத்தின் ஆன்மாவையே எழுச்சிகொள்ள வைத்த வரலாற்று நிகழ்வு அது. அமைதிப்படையென வந்து அட்டூழியம் புரிந்த இந்தியப்படைகளின் உண்மை முகத்தினை உலகிற்குப் புரியவைத்த நிகழ்வு அது.

இன்றைய நாளில் அந்த ஈடு இணையற்ற தியாகியின் நினைவில் நாம் இரண்டறக்கலந்து இருக்கின்றோம். விடுதலைப் பயணத்தில் அவன் புரிந்த அர்ப்பணிப்புக்களை மீண்டுமொருமுறை மீட்டிப்பார்க்கின்றோம்.

1983 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்த திலீபன் ஆரம்ப காலகட்டத்தில் விடுதலைக்கான மக்கள் கட்டுமான வேலைகளைச் செய்து வந்தார்.

பின்னர் வட்டுக்கோட்டை, மானிப்பாய்ப் பிரதேச பரப்புரைப் பொறுப்பாளராகப் பொறுப்பேற்ற திலீபன் மக்களிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை சாதுரியமாகத் தீர்த்துவைக்கின்ற அவரது ஆற்றல் பலமுறை நிரூபணமானதொன்று.




1985ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் மூத்த உறுப்பினர் கப்டன் பண்டிதர் வீரச்சாவடைந்த பின்னர் கடமை,கண்ணியம், கட்டுப்பாடு கொண்ட வரும் தலைமைமீது உயர்ந்த பற்றுக் கொண்டவருமான திலீபனின் நற்பண்புகளால் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராகத் தலைமையால் திலீபன் நியமிக்கப்பட்டார்.

அரசியல் பணியில் மட்டுமன்றி சிங்கள இராணுவத்தினர் மீதான பல தாக்குதல்களிலும் தீவிரமாகப் பங்கேற்றார்.

வல்வைப்பகுதியில் நடந்த ஒரு மோதலில் வயிற்றில் காயமடைந்த திலீபன் உடல் இயலாமையால் சோர்ந்து விடவில்லை. தீவிரமான அரசியல் செயற்பாட்டில் இறங்கினார். பல அமைப்புக்கள் அவரால் நிறுவப்பட்டன.தமிழீழ மாணவர் அமைப்பு, சுதந் திரப்பறவைகள் அமைப்பு, தமிழீழ கலாச்சார அவை, தமிழீழ விழிப்புக்குழுக்கள், உற்பத் திக்குழுக்கள், தமிழீழ தேசப்பக்தர் அமைப்பு என்பன திலீபனால் உருவாக்கப்பட்டன.

இன்று இவை பல துறைகளாக பல பிரிவுகளாக வளர்ந்து விருட்சமாகி நிற்கின்றன.

தமிழீழ விடுதலைப்போரினால் பல குழப்பங்களிற்கு உள்ளாகிய இந்திய அரசு தனது நலன்களிற்காக சிறிலங்கா ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய முன்வந்தது.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் இற்கும் இலங்கையின் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் இடையில் ஓர் உடன்பாடு கைச்சாத்திடப் பட்டது.

தமிழ் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே மேற்படி ஒப்பந்தம் உருவாக்கப் பட்டதாகக் கூறப்பட்டபோதும்தமிழ் மக்களுக்கு அது பாதுகாப்பு அளிப்பதாக இருக்கவில்லை. குறுகிய காலத்திற்குள்ளேயே தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை தமிழ் விரோதக்குழுக்களும், இந்தியப் படைகளும் ஆரம்பித்திருந்தன. ஒப்பந்தத்தின் பல சரத்துக்கள் நடைமுறைப்படுத்தப்படாதிருந்ததுடன் மீள் குடியேற்றம் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள் வீச்சுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆயுதங்களைக் கையளித்துவிட்டு நிராயுதபாணிகளாக நின்ற போராளிகளின் பாதுகாப்பு கேள்விக்குள்ளானது. இன்றைய சமாதான சூழ்நிலையில் எவ்வாறு சிங்களப்படைகளாலும், கூலிப்படைகளாலும், புலனாய்வுப்பிரிவினராலும் , பொதுமக்களும், போராளிகளும் படுகொலைசெய்யப்படுகின்றனரோ அவ் வாறானதொரு வன்முறை அன்றைய காலகட்டத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

இவ்வாறான வன்முறைகளால் ஆத்திரமடைந்த தமிழ்மக்கள் பல வழிகளில் தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினர். அந்த வகையில் யாழ்.கோட்டை இராணுவ முகாமின் முன் மறியல்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மத்தியில் உரையாற்றிய திலீபன் ஒருவிடயத்தை மக்களுக்குத் தெளிவாக உரைத்தார். அதுதான் "மக்கள் புரட்சி மூலமே விடுதலை என்பதே அது.

இந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்களுக்குச் செவிசாய்க்காத இந்திய அரசினது நிலையை உணர்ந்த திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த முடிவு செய்தார்.

□பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.

□"புனர்வாழ்வு" என்ற பெயரில் தமிழர் தாயகப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

□"புனர்வாழ்வு" என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் இடைக்கால அரசு நிறுவப்படும்வரை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

□வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொலிஸ்நிலையங்கள் அமைக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

□ இந்திய அமைதிப்படையினால் "ஊர் காவல்படை." எனப்படுவோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் களையப்பட்டு தமிழ்க்கிராமங்களில், பாடசாலைகளில் அமைக்கப்பட்ட இராணுவ, பொலிஸ் நிலையங்கள் விலக்கப் படவேண்டும்.


என்ற கோரிக்கைகளே திலீபனால் முன்வைக்கப்பட்டிருந்தன. இவை இரண்டு நாட்களுக்கு முன்பே இந்திய தூதுவரிற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் இந்திய அரசிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்காததால் திட்டமிட்டபடி 1987ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15ஆம் திகதி திலீபன் தனது தியாகப்பயணத்தை ஆரம்பித்தார்.

அன்றைய தினம் மிகவும் உற்சாகமாகவும், கலகலப்பாகவும் தோழர்களுடன் உரையாடினார் திலீபன். ஆனால் தோழர்களின் மனங்களில் கவலைகள் மட்டுமே குடிகொண்டிருந்தன. அவர்களால் உற்சாகமாகவோ, கலகலப்பாகவோ உரையாட முடியவில்லை.

தோழர்களிடமிருந்தும், தலைவரிடமிருந்தும் விடைபெற்றுத் திலீபன் நல்லூர் ஆலயப் பகுதியை சென்றடைந்தார். ஆலய வீதியில் தாயொருவர் தான் கோயிலிலிருந்து கொண்டு வந்திருந்த அர்ச்சனைத்தட்டில் இருந்த திரு நீற்றை அவரது நெற்றியில் இட்டு வழியனுப்பி வைத்தார். நேரம் காலை 9.55 நல்லூர் ஆலயப் பின்வீதியில் அமைக்கப்பட்ட உண்ணாவிரத மேடையில் வந்தமர்கின்றார். அங்கு திரண்டிருந்த மக்களைப் பார்த்து திலீபன் புன்னகைக்கின்றார். திலீபனின் இந்தப் போராட்டத்திற்கு இந்திய அரசு மதிப்பளிக்கும் என்றே அனைவரும் நம்பினர்.

திலீபன் தியாகப்பயணத்தைத் தொடங்கி முதல் நான்கு நாட்களும் எந்தப்பதிலும் இந்திய அரசிடம் இருந்து வரவில்லை. ஐந்தாம் நாள் இந்திய இராணுவத்தின் யாழ். கோட்டை இராணுவமுகாம் பொறுப்பதிகாரி விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தினார். ஏழாம் நாள் பிறிதொரு தரப்பினர் பேச்சுக்களில் ஈடுபட்டதுடன் ஒன்பதாம் நாள் தலைவர் அவர்களுடன் இந்தியத் தூதுவர் பேச்சுக்களில் ஈடுபட்டார். இவ்வாறாகத் தொடர்ந்த பேச்சுவார்த்தைகள் யாவும் இந்திய அரசின் விட்டுக்கொடுக்காத கடும்போக்கினால் தோல்வியைத் தழுவின.

திலீபனின் நிலை கண்டு பொதுமக்கள்



பலர் அவரது போராட்டத்தை கைவிடுமாறு அன்புக்கோரிக்கை விடுத்தனர். திலீபன் தனது தியாகப்பயணத்தில் எதற்குமே விட்டுக் கொடுக்காத உறுதியுடன் இருந்தார். பன்னிரு நாட்கள் மெல்ல நகர்ந்தன புரட்டாதி மாதம் 26ஆம் நாள் காலை 10.48 தியாக வேள்வியின் இறுதிக்கணங்கள் அவை நல்லூர் ஆலய முன்றல் எங்கும் அழுகுரல்கள். ஆம்! அந்தத் தியாகி எம்மைவிட்டுப்பிரிந்து சென்று விட்டார்.

"புனிதமானவன்" என்ற சொல்லிற்கே உரித்தானவன் திலீபன். தன்நலனைவிடுத்து பிறர் நலனுக்காகத் தன்னை அழிப்பனே தியாகிஎன்ற தகைமையைப் பெறமுடியும். அவ்வாறானதொரு அர்ப்பணிப்பைத்தான் திலீபன் செய்துள்ளார். தன்னுயிரை, உடலை அணுஅணுவாக மக்கள் நலனுக்காக அழிதது அதில் மகிழ்ந்திருந்தார் எங்கள் திலீபன் .

திலீபன் தனது உரைகளில் வெளிப்படுத்தியது ஒன்றே, அது "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்" எனபதே. திலீபனின் அந்தக் கனவுகள் மக்கள் எழுச்சிகள் மூலம் நனவாகியது மக்களின் எழுச்சியால் பல வெற்றிகளைப் புலிப்படை பெற்றது. இந்த வரலாற்று மாற்றங்களுக்கு ஆதாரமாக அமைந்தது அவரின் இந்த வைரவரிகளே.

**திருவையூர் சி.ஜெயதீபன்.**

## அகிம்சை நெருப்பு நதி நீந்தி விடுதலைப்பயிர் வளர்த்தவன் திலீபன்

மில்லரவன் அடியுடன் மிரண்டுபோன சிங்களம்
வல்லரசு படையுடன் எமையழிக்க சதிசெய்தது-அன்று
நல்வரவுடன் வரவேற்றோம் பாரதப்படையை
தொல்லை தரவருகிறது இப்படையென்று யாரறிந்தோம்!
எம் தாய்நிலமதை மீட்டிட நாம் போர் செய்த வேளை
விண்ணேறி எம் ஈழநிலமெங்கும் வந்திறங்கிய பாரதப்படையின்
அமைதித்திரை விலகி ஆக்கிரமிப்பு வாசல் தெரிந்திடவே
புலியொன்று போனது புதிய வரலாற்றுப் போர் செய்ய!
பலியெது! வரினும் பகைமுன் பணியா புலிகள் வாழும் எம்
தாயக பூமியில்விடுதலை நெருப்பை நெஞ்சில்
சுமந்தவன் எங்கள் திலீபன்
நோன்புக்காலத்தில் அக்கினியால் உடல் உருகிய போதும்
விடுதலைத்தீயை விண்ணில் ஏற்றி மகிழ்ந்தவன்- இவன்
தமிழீழ தேசத்தின் போரியல் பாதையில் புதிய வரலாற்று நாயகன்
அகிம்சை ஆயுதத்தால் வல்லரசு படையை எதிர்த்தாடியவன்
வரலாற்றில் தமிழன் பணியான் எனும் பாடம் போதித்தவன்
உண்ணா நோன்பில் உடல் உணர்விழந்த போதும்- இவன்
விடுதலைப் போரின் உணர்விழக்காத வீரப்புலி
தலைவன் அருகிருந்து விடுதலைப்பயிர் வளர்க்க
தினமும் ஒளிர்ந்த ஒளிவிளக்கு- இவன்
அணைகின்ற வேளையிலும் தலைவன் நினைவுடன்
தமிழீழம் உச்சரித்த அகிம்சைப்புலி
தமிழீழ மலர்வைக்காணத்துடித்த யாத்திபமே- உனை
தாயவன்போடு தனைதடவிய தலைவன் வழியில் தலை நிமிர்ந்து தமிழீழ
சுதந்திர நாடமைத்து உன் தமிழீழ தாகத்திற்கு நீர் ஊற்றுவோம்!
-ம.சுரேந்திரன்

## அந்த நாள்....வரும்

நல்லா -அன்று
உன் தேச உரிமைக்காய்
உன் மக்கள் முன் உணவை ஒறுத்து
உயிரோடு எரிந்தாய் அவர்தம்
கண்ணெதிரே முன்னாலே
உயிர் விட்டுப் போனாய் உலகக் கூட
உன் மக்களின் சுக நலனுக்காய் .
உயில் வைத்துப் போனாய்
ஓடி ஒளிவாயின் வழி
எங்கும் சிதற... நீ இட்ட தீ
சரித்திரமாகி எங்கும்
அலைந்தும் பொங்கியும் திரிகிறது-அது ஒரு நாள்
குளிர் மலையாய் ஓங்கும்
அந்த நாள்
கா.சுஜோ

# ஓயாத அலைகள்–02 கிளிநொச்சி மீட்பு நடந்ததெவ்வாறு?

இ.சசிக்குமார்

கிளிநொச்சி படை முகாமில் முன்னரங்க நிலைகளை தகர்த்தழிப்பதற்காக காத்திருந்த அணிகளுக்கு சண்டையை ஆரம்பிப்பதற்கான கட்டளை கிடைத்ததும் முன்னரங்க காவலரண்களைத் தாக்கியழித்து முன்னேறி வாறு அணிகள் நகரத் தொடங்கின. இப்படைத்தளத்தைச் சுற்றி 25 அல்லது 30 மீற்றருக்கு ஒரு காவலரணாக ஏறத்தாழ 500 இற்கு மேற்பட்ட முன்னணி பாதுகாப்பு அரண்கள் அமைந்திருந்தன. இவற்றோடு மண் அரண்கள், முட்கம்பிச் சுருள்கள் கண்ணிவெடிகள் எனப் பல பாதுகாப்பு அரண்கள் இருந்தன. இவற்றைத் தகர்த்தழித்தவாறு முன்னேறிய புலிகள் அணிகளின் அடுத்த இலக்காக கிளிநொச்சி 6 ஆம் வாய்க்காலில் அமைந்திருந்த 10 ஆவது சிங்கறெஜிமென்ற் - தளம் கணேசபுரப் பகுதியில் அமைந்திருந்த 4 ஆவது சிங்கறெஜிமென்ற் தளம், பிரதான பாதையோரமாக இருந்த 6 ஆவது கெமுனுவோச்தளம், திருவையாற்றிலிருந்த 7 ஆவது கெமுனுவோச் தளம் என்பன அமைந்திருந்தன. இவற்றோடு புலிகளின் தாக்குதல் வியூகத்துக்குள் அமைந்திருந்த 9 ஆம் வாய்க்கால் பகுதியில் இருந்த 9 ஆவது கெமுனுவோச் தளமும், கரடிப்போக்கு மேற்குப் பகுதியிலிருந்த 7 ஆவது சிறிலங்கா காலாட்படைத்தளமும், மக்கள் வங்கிக் கட்டடத்தினருகிலிருந்த கிளிநொச்சி பிரிகேட் தலைமையகமும் தாக்கப்படவேண்டிய இலக்குகளாகவிருந்தன. இவற்றோடு பல மினி முகாம்களும் இப்பெரும் படைத்தளத்தினுள் இருந்தன. இவற்றை வெற்றிகரமாக தாக்கியழிக்கும் பணியில் விடுதலைப்புலிகளின் பல படையணிகளும் தீவிரமாக செயற்பட்டன.

இச்சமரில் மகளிர் படையணிகளின் பங்கும் அளப்பரியதாகவே அமைந்திருந்தன. இச்சமரில் பங்குபற்றிய மகளிர் அணிகளில் 2 ஆம் லெப்.மாலதி படையணியின் தளபதி கேணல் விதுசா அன்றைய போர்க்களத்தில் நடந்த சம்பவங்கள் பற்றியும் போராளிகளின் தீரமிகு தாக்குதல்கள் பற்றியும் அவர்களின் தியாகங்களையும் இன்றைய நாளில் இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

2 ஆம் லெப்.மாலதி படையணி மூன்று முனைகளில் இராணுவக் காப்பரண்களைத் தாக்க உட்புகுந்தது. படையினரின் வெளிப்புறப் பாதுகாப்பு வேலிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்ட அதேவேளை கிளிநொச்சி இராணுவம் ஆனையிறவுக்குத் தப்பியோடாமலும், ஆனையிறவிலிருந்து கிளிநொச்சிக்கு உதவிப்படைகள் வராமலும் தடுக்கும் ஊடறுத்து வழிமறிக்கும் அணியாகவும் செயற்பட்டிருந்தது. நாங்கள் தாக்கவேண்டிய பகுதி வேவு பார்க்கப்படாத பகுதியாகவிருந்தது. ஏனெனில் நாம் போவதற்காக வேவுப் போராளிகளால் தீர்மானிக்கப்பட்டிருந்த பகுதியில் இராணுவத்தினர் படைத்தளத்திற்கு வெளியே வந்து உலாவத் தொடங்கியிருந்தார்கள்.

எனவே திடீரென எமக்கு வேறு ஒரு பாதை சண்டை நடக்கவிருந்த அன்று மாலை காட்டப்பட்டது. நாங்கள் அருகே போய் தடைகளையும் காப்பரண்களையும் பார்க்க முனைந்தால் இப்பகுதிச் சண்டை குழம்பி விடும் ஆபத்து இருந்தது. பரந்த வெளியூடே எமது உருவங்களை மறைத்தவாறு 50 கலிபர் போன்ற கனரக ஆயுதங்களுடன் நாம் நகரும்போது காப்பரண்களிலிருந்தே எதிரியால் தேடொளி பாய்ச்சப்பட்டது. வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டன. படைத்தளங்களோ மிக விழிப்பாக இருந்தன. இத்தனைக்கும் மத்தியில் தடை வரை நகர்ந்த பின்னர்தான் காப்புச் சூட்டாளர்களை நிலைப்படுத்துவதற்கான இடங்களை ஒழுங்கு செய்யவேண்டியிருந்தது. காப்பரண்களைத் தாக்கி உள்நுழைந்து பக்கக் காப்பரண்களைக் கைப்பற்றியவாறு போகும்போது எமக்குப் பின்புறமாக பிளாட்டூன் தலைமையகத்திலிருந்து கடும் எதிர்ப்பு வந்தது. நிலத்துக்குமேலே உயரமாக அமைக்கப்பட்டிருந்த காப்பரண்களிலிருந்து கனரகச் சூடுகளை இராணுவத்தினர் வழங்கிக் கொண்டிருந்தனர். காப்பரண் வரிசையிலிருந்து குறுக்கே வெட்டப்பட்டிருந்த நகர்வகழிக்குள்ளிருந்தும் (மூவிங்பங்கர்) படையினர் தாக்கினார்கள். உள்ளிருந்த உயர்ந்த கட்டடமொன்றிலிருந்தும் கடும் எதிர்ப்பு வந்தது. அந்த நேரம் எங்களுடைய 50 கலிபர் தாக்குதல் போராளிகளின் திறமையான செயற்பாடு நிலைமையை மாற்றியது. ஓரிடத்திலிருந்து குறிப்பிட்ட ரவைகளை அடித்துவிட்டு உடனேயே தமது நிலையை மாற்றி மாற்றி தாக்குதலை மேற்கொண்டார்கள்.




எங்களுடைய இழப்புக்களை குறைத்து இராணுவத்தினரின் எதிர்ப்பைக் கட்டுப்படுத்துவதில் இக்கனரக ஆயுத அணி பெரும் பங்காற்றியது. நீண்டு தொடர்ந்த ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கைச் சமரில் தொடர்ந்து பங்காற்றிய எமது கனரக ஆயுத அணியினர் குறுகிய காலத்தில் கடும் பயிற்சியைப் பெற்று மிகுந்த சிரமத்தின் நடுவேதான சண்டைக்கான நகர்வைச் செய்திருந்தார்கள். திடீரென தேர்ந்தெடுக்கப்பட்ட எமது பாதைக்கருகே இராணுவம் வெளியே உலாவுகின்ற பகுதி இருந்தது. எனவே எமது




கவனக் குறைவால் எதிரி விழிப்படைந்து சண்டை குழம்பி விடக்கூடாது என்பதில் ஒவ்வொருவரும் உறுதியாக இருந்தோம். உடலின் உயரத்தை குறைத்து (பென்ட்மூவ்) மிக நீண்ட தூரம் கனரக ஆயுதங்களுடன் நகருவது இலகுவான விடயமல்ல. மிகச் சிறப்பாகஇச் சண்டையில்எமது போராளிகள் செயலாற்றியிருந்தார்கள். இச்சண்டையில் எமது போராளிகளின் மனவுறுதியை மேம்படுத்தும் தியாகங்கள் பலவும் நடந்தேறின. அதாவது ஊடறுத்து உள்நுழைந்து வழிமறிக்கும் அணியோடு மழையில் நனைந்தபடி பயிற்சி பெற்ற காலத்தில் லெப். கேணல் செல்வியின் தலையிலும் உடலின் பல பாகங்களிலும் இருந்த ஷெல்லின் சிதறு துண்டுகளின் தாக்கத்தால் ஒரு கையும் காலும் முழுமையாக இயங்காதிருந்தது. பயிற்சிக்குப் பொறுப்பாக இருந்த தளபதி இவரை வெளியே எடுக்குமாறு கூறியிருந்த போதும் தன்னால் செய்யமுடியும் என்று செல்வி வர மறுத்துவிட்டார்.

கிளிநொச்சி மீட்பு நடவடிக்கையில் தான் பங்குபற்ற வேண்டும் என்று உறுதியோடு சென்ற அவர் நடவடிக்கையின் முடிவில் அவிழ்த்துவிட்ட விலங்குப்பட்டிபோல எமது ஊடறுப்பு நிலைகளைக் கடந்து இராணுவம் ஓட முனைந்தபோது தன்னையும் பாராமல் எறிகணைகளை வீசுமாறு கேட்டு பல இராணுவத்தினரை அழித்ததோடு தானும் வீர வரலாறானார்.

செல்வியோடு நின்ற வீரவேங்கை அகஅன்பு (அகன்பு) வைப் பற்றியும் நான் குறிப்பிட வேண்டும். புதிய போராளியாக ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கை முனைக்கு வந்த இவரை அடர்காடு அச்சமடையச் செய்துவிட்டது. செல்வியின் அணி வழிமறிப்புப் பயிற்சியில் ஈடுபட்டபோது அகன்புவும் பயிற்சியில் ஈடுபட்டார். ஊடறுப்பு நடவடிக்கை சண்டையின் மிக முக்கியமான செயற்பாடு என்பதால் அதில் பங்கேற்பவர்கள் உறுதி மிகுந்தவர்களாக இருக்க வேண்டும். எனவே அகன்புவைப் பயிற்சியெடுக்க வேண்டாமென்றும் அவருக்கு பதிலாக வேறொரு போராளியை விடுவதாகவும் நான் கூறிய போது அவர் மறுத்துவிட்டார். தான் திறமையாக நடவடிக்கையைச் செய்வேன் என்று கூறினார். சண்டையில் இராணுவத்தினர் பெருந்திரளாக ஓடிய அந்த சந்தர்ப்பத்தில் தன்னிடமிருந்த ரவைகள் முடிவடையும் வரை சுட்டுவிட்டே வீரச்சாவடைந்தார். இவருடைய மனவுறுதி புதிய போராளிகளின் உறுதியான செயற்பாட்டுக்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்தது.

இந்தச் சண்டை எமக்கு ஒரு மாறுபட்டகள அனுபவத்தை ஏற்படுத்தியது. அதாவது இச்சமருக்கு அண்மைக்காலங்களில் தாண்டிக்குளம் உட்பட எமது பல ஊடுருவல் தாக்குதல்கள் காடுகளிலேயே நடந்தன. காட்டுப் பகுதியில் எதிரியின் நிலைகளுக்கு அருகே நெருங்கிப் போய் வேவு பார்த்துத் தாக்கலாம். காட்டுச் சண்டைகளுக்குப் பழக்கப்பட்ட அணிகள் பரந்த வெளியால் நகர்ந்து கட்டடங்களிடையே சண்டை பிடித்தமை வேறுபட்ட அனுபவம். இரவு வேளையில் நாம் காப்பரண்களைக் கைப்பற்றி வெளியான பகுதியில் நிலைகொள்ள பகல் வெளிச்சத்தில் மறைந்திருந்த இராணுவம் எம்மைத் தாக்கியதில் எமக்கு இழப்புக்கள் ஏற்பட்டன. காட்டுச் சண்டைகளில் இத்தகைய நிலை இல்லை. எனவே வெளியான பகுதிகளில் நின்று எமதணிகள் கட்டடப் பகுதிக்குள் நின்ற இராணுவத்தோடு சண்டையிட்டன. அந்த நேரத்தில் ஒரு மாறுபட்டகள அனுபவம் மிகப் பலம் கொண்ட படைத்தளமாக கருதப்பட்ட ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்து எந்த நேரமும் உதவி பெறக்கூடிய நிலையிலிருந்த கிளிநொச்சிப் படைத்தளத்தை முற்றாக அழித்ததும், பெரியது, எண்ணிக்கையில் போராளிகள் வழிமறிப்பு அணியாக ஊடுருவி நின்றதும் வேறுபாடான அனுபவங்களே. இந்த நடவடிக்கையின் வெற்றிக்கு வழிமறிப்பு அணி மிகுந்த பங்காற்றியது. இச்சண்டைக்காக அவர்கள் எடுத்த பயிற்சி கடினமானது. ஜெயசிக்குறு இராணுவத்தினரின் எறிகணை வீச்செல்லைக்குள் விமானக்குண்டு வீச்சுக்களிடையே மாற்ற உடையுமின்றி மழையில் நனைந்து



வெயிலில் உலர்ந்தபடி பயிற்சி எடுப்பதும் பின்பு இரவுவேளைகளில் காப்பரண்களில் காவல் செய்ததுமாய் மிகக் கடுமையாக இவ்வெற்றிக்காக உழைத்திருந்தார்கள். நனைந்த குளிருக்குச் சூடாகத் தேநீர் குடிக்கக் கூட வசதி இருக்கவில்லை.

வழிமறிப்பு அணியினரின் ஆயுதங்களுக்கேற்ப நிலைப்படுத்தல், இவர்களுக்கான ஆதரவுச்சூடு என அனைத்தையும் தலைவர்



அவர்கள் மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு நெறிப்படுத்திப் பயிற்சி வழங்கியமையானது. சண்டையை மிகவும் இலகுவாக்கியது ஏனெனில் சண்டை தொடங்கி மூன்று நாட்களின் பின்னர் முடியும்வரை வழிமறிப்பு அணியினர் தமது நிலைகளிலிருந்து அசையவில்லை. சத்ஜெய - 1, 2, 3 எதிர் நடவடிக்கைகளில் எதிரியின் கைகளில் கிளிநொச்சி வீழாதிருக்கப் போராடியது. மறுபடி பரந்தன் கிளிநொச்சி (1998.02.01) இல் ஊடுருவித் தாக்குதல் மூலம் நிலத்தை மீட்க முயன்ற நடவடிக்கையில் பங்கேற்றதான நினைவுகள் பயிற்சியின் போது எமதணிகளுக்கு உரமூட்டின.

யாழ். நெடுஞ்சாலைக்கு இடப்புறமாக புகையிரதப் பாதையருகே 2 ஆம் லெப் மாலதி படையணியைச் சேர்ந்த ஜமுனாவின் அணி உடைத்து உள்நுழைந்தது. அயலில் வேறு அணிகள் எடுத்த பாதைகள் போராளிகளிடமும் இராணுவத்தினரிடமும் கைமாறியபடியிருந்தாலும் தமது பாதையை அவர்கள் தக்க வைத்திருந்தார்கள். பல நடவடிக்கைகளைச் செய்வதற்கு அவர்களது பாதை பேருதவியாக இருந்தது. மிகக் குறைந்தளவு போராளிகளே இவ்வணியிலிருந்தனர். மிகக் குறைந்தளவு பயிற்சியையே அவர்கள் எடுத்திருந்தார்கள். என்னுடைய தொடர்பேதுமின்றி தனியாகவே அவர்கள் திறம்படச் செயலாற்றினார்கள்.

இவ்வெற்றிச் சமரில் மகளிர் அணியின் 2 ஆம் லெப். மாலதி படையணி, மேஜர் சோதியா படையணி, கப்டன் அன்பரசி படையணி, சிறப்பு (மகளிர்) படையணி, புலனாய்வுத்துறை மகளிர் தாக்குதலணி போன்ற பல மகளிர் படையணிகள் பல முனைகளில் வெளிப்புறக் காப்பரண்களைத் தாக்கி உள்நுழைந்ததோடு வழிமறிப்பு அணியாகவும் பங்காற்றினார்கள். மிக அதிகளவான பெண் போராளிகள் இச்சமரில் பங்காற்றினார்கள். நடவடிக்கையின் ஆரம்பத்திலிருந்து இறுதி தேடுதல் நடவடிக்கை வரை அவர்களின் பணி தொடர்ந்தது எனக் கூறினார்.

(தொடரும்)

# தியாக தீபமே ...... உன் நினைவாக

## தமிழீழத்தின் அகிம்சையாளன்

நல்லைக் கந்தன் ஆசீர்வாதம்
தினம் தினம் உங்களுக்கு
வெற்றி வரும் என்றிருந்தோம்
பார்த்த விழியோடு பாவியர்கள்
நாமிருந்தோம் மேடையருகில்
பாதகர்கள் பார்த்திருந்தார்கள்
என்ன பயன்
பார்த்துருகவில்லை எங்கள் பார்த்தீபனை.

திலீபனே எங்களிடம் இருந்து
உங்களை பறித்தெடுத்ததேன்
பதை பதைத்தோம் ~ துடி துடித்தோம்
கண்ணீர் மழையில் நாங்கள் நனைந்தோம்
யார் தேற்றுவார் நாமே எழுந்தோம்
நடைப் பிணமாய் அல்ல
மக்கள் படையாய் திரண்டோம்.

எங்கள் தலைவனுக்குத் தோள் கொடுத்தோம்
வெற்றிகள் பல குவித்தோம்
உங்கள் நினைவுடனே
பல மருத்துவமனைகள் திறந்தோம்
உங்கள் மகத்தான சேவைதனை
மனதிலே நிறுத்தினோம்.

பார்த்தீபனே!
மக்கள் விடிவை எண்ணி
உதிர்ந்து போனீரகளே!
தாங்குமா தமிழர் நெஞ்சம்.
பொங்கியெழுந்தோம்
புதுப் புயலாக .... இன்று
புதிய வரலாறு நாம் படைத்துள்ளோம்
வென்றிடும் நாளுக்காய்

எங்கள் தோழர்கள்
அல்லும் பகலும் அயராது
உழைக்கின்றார்கள்
அவர்கள் வழியினிலே அனைவரும்
ஒன்று திரள்கின்றோம்
எங்கள் தமிழீழத்தை
நாமே அமைப்போம்
அந்நியருக்கு அடி பணிய மாட்டோம்
தலைவன் காலத்தில் தமிழீழம் அமைப்போம்
அதுவரை பார்த்தீபனே!
அமைதியாய் உறங்கிடுங்கள்.

மக்கள் புரட்சி இன்று
பொங்கு தமிழாய் ~ மாபெரும் சக்தியாய்
நிமிர்ந்து நிற்கின்றது
புலம் பெயர் எம் சகோதரர்களோ
பொறுத்தது போதும் என்று
புயலாய் எழுகிறார்கள்

தமிழன் பயந்த காலம் ஓடிவிட்டது
துணிந்து விட்டான்
ஆயுதப் போராட்டமா
அகிம்சைப் போராட்டமா
எதற்கும் நாம் தயார்
தமிழீழம் அமைப்பதற்காய் போராட
உங்கள் நினைவை நெஞ்சினில் நிறுத்தி
தொடர்கின்றோம் எங்கள் பணி
நீர்வேலியூர்~வே~ அகமொழி

## வல்லமை கொண்ட நீ

மலரும் தமிழீழமதை நான்
மகிழ்வுடன் காண்பேன் என்றாய்
சாவு உன்னை வெல்லவில்லை
சாவினையே வென்று நின்றாய்
உறுதியான உன் தீரம்
உலகு உள்ளவரை உறவாடும்
சந்ததிகள் மாறிடினும் எம்
சரித்திரத்தில் நீ வளர்வாய்

தேரோடும் கந்தனின் வீதியில்
தேசத்து மைந்தன் உன் யாகம்
பன்னிரண்டு நாளாய் பார்த்தீபன்
பகலிரவாய் பசித்திருந்து கேட்டாய்
பாரதத்தின் அன்பு வழி ஊமையாகி
பார்த்தீபனை அருகிருந்தும்
காக்க வில்லை
நேசக் கரங்களில் பாசக்கயிறுடன்
நேருவின் வாரிசு நிமிர்ந்தார்.

நாவரண்டு நீ சுருண்ட போதும்
நாணவில்லை காந்திய தேசம்
வான் ஒளிரும் தாரகையாய் நின்றாய்
வாய் ஒறுத்து சாவினை நீ வென்றாய்
மலர்ந்த உன் உதடுகளால்
"மக்களே புரட்சி" என்றாய்
புரட்சியாய் மக்கள் கூட்டம்
புவிதனில் நிமிர்ந்து விட்டார்

மக்கள் சக்தி ஒன்றாய்
மலை போல் திரள்கிறது ஈழம்
பொங்கு தமிழ் பிரகடனம்
பொலிகிறது பூமி எங்கும்
வருடங்கள் கடந்திடினும் உன்
வார்த்தையின் வீரியத்தில்
தலைவனின் கொள்கைப்படி – நாளை
தமிழீழ மலர் மலரும்
– வயவை அ. யூலியஸ்

## பசி கிடந்த பார்த்தீபன்

துளி நீரும் அருந்தாமல்
துளித்துளியாய் உயிர்ந்த
தூயதமிழ்ப் பிள்ளை
பழிப்போடு வந்தெங்கள்
பாதையிலே தடுத்தவரின் முகத்
திரைகிழிந்து விரைவாக
நடைபயில வைத்தவன்
மறுவின்றி மக்களை நேசித்து
மறப்பின்றி என்றும்
மக்களால் நேசமுறுபவன்
அந்நிய ஆதரவென்னும்
போலித் திரை கிழித்து சுதந்திரப்
போருக்கு மக்களைப்
பொங்கியெழ வைத்தவன்
போரோய்ந்த பொழுதொன்றில்
போய் முடிந்தான் எம்பிள்ளை
பசியோடு போய்விட்டான்
நீதிதேவனது நெஞ்சு பிளக்க வில்லை
நீதி கிடைக்கவில்லை
பார்த்திருந்தோம்
பார்த்திருக்கப் பார்த்திருக்க
எங்களுக்குள் பலமிழந்து வந்தது
பசியோடு போய்விட்ட
பார்த்தீபனின் விடுதலைப் பசியேந்தி
விழி சிவந்து நிற்கின்றோம்.
—— ஆதிலட்சுமி சிவகுமார்



## உன் கனவு நனவாகும்!

*நல்லூரின் வீதியிலே அண்ணா*
*நாமெல்லாம் பார்த்திருக்க*
*நாலுமூன்று நாளாய் நீ நோன்பிருந்தாய்*
*கதறினோம் அண்ணா பதறினோம்-உன்*
*விரதத்தை விட்டுவிடு எனக் கெஞ்சினோம்!*
*அசையா உறுதி கொண்டவனே*
*அண்ணன் பிரபாவின் தம்பியே*
*உறுதியாய் நின்றாய் உன் யாகத்தில்*
*பாரதமே திரும்பிப்பார் என்று கூப்பிட்டோம்*
*கண்மூடித்தனமாய் அது இருந்ததையா*
*நாவிலே துளி நீர் கூட அருந்தாது*
*நீதி கேட்டு யாகம் செய்தாய்-நீ*
*உன்யாகம் கண்டு நாம் துடிதுடித்தோம்*
*"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் "*
*சுதந்திர ஈழம் மலரட்டும் -என்று*
*நீ சாகும் வரையிலும் சொன்னாய் -இன்று*
*மக்கள் புரட்சி வெடிக்கிறது*
*நிச்சயம் உன் கனவு நனவாகும் அண்ணா*
*அது வரையில் நிம்மதியாய் உறங்கிவிடு*
*செந்தேவி ,இன்மொழி*

## நான் மீண்டும் வருவேன் உமைத் தேடி

மரணம் என்னை அணைத்தாலும்
மக்கள் மனங்களில் நான் இருப்பேன்
புது ஜனனம் எடுத்தே மறுபடியும்
தமிழீழ மண்ணில் நான் பிறப்பேன்

உணவு எனக்குப் பெரிதில்லை
உறக்கம் கூடப் பெரிதில்லை
நாளை நமதே என்றெண்ணி
நம் வாழ்வை மாற்றப் புறப்பட்டேன்

என்னைப் பார்த்து அழவேண்டாம்
எம் இனத்தின் கதியை எண்ணிடுவீர்

உம்மைக் கொடுத்தேயானாலும்
புது உலகம் படைக்க வழிசமைப்பீர்

அநாதை அகதி நிலை வேண்டாம்
அமங்கலி-சுமங்கலி பதம் வேண்டாம்
ஏழை பிரபு என்றில்லா
வாழ்வு மலர அணிதிரள்வீர்

நான் மீண்டும் வருவேன் உமைத்தேடி
வேண்டும் விடிவு நமக்கெல்லாம்
பாண்டவர் பூமி ஆண்டது போல
மீண்டும் நம்மை நாமாள்வோம்
புதுக்கவி
——

## திலீபன் அண்ணா நீ எங்கேயண்ணா போய் விட்டாய்

*உண்ணா நோன்பிருந்து உரிமை பெற்ற தேசத்திடம்*
*அண்ணா எம் உரிமை கேட்டு உண்ணா நோன்பிருந்தாய் –அன்று*
*திலீபன் அண்ணா உண்ணா நோன்பு மேடையில்*
*நீ முழங்கிய விடுதலை வார்த்தைகள் எம் காதில் ஒலிக்கிறது!*
*திலீபன் அண்ணா*
*நீ எங்கேயண்ணா போய்விட்டாய்*
*பிரபா எனும் பெரும் தலைவன் மடி தவழ்ந்து விடுதலைப்பயிர் வளர்த்தவன் நீயண்ணா*
*பசித்த வயிற்றுடன் நீ படுத்திருந்த போது பார்த்த விழிகளில் நீர்த்துளிகள்!*
*சிரித்த முகத்துடன் அகிம்சைப் பயணத்தில் அடியெடுத்து வைத்தவனே !*
*மீண்டும நீ வருகையில் சிரிக்கும் எம் முகங்கள் என்று விழித்திருந்தோம்*
*திலீபன் அண்ணா*
*நீ எங்கேயண்ணா போய்விட்டாய்*
*எம் இனத்தின் விடுதலைப் பசி போக்கிட*
*உன் உடலை உருக்கி பசி கிடந்து போனாயேயண்ணா*
*அண்டம் யாவும் வியந்து பார்த்திட–எம்*
*ஈழநிலத்தின் விடுதலைப் பசியின் உச்சம் தொட்டு காட்டி போனாயேயண்ணா*
*தீலீபன் அண்ணா*
*நீ எங்கேயண்ணா போய்விட்டாய்*
*விண்ணிருந்து விடுதலை மலர்வை பார்ப்பேன் என்றாயே*
*விண்ணில் பார்க்கின்றோம் உன் முகம் தெரியவில்லையேயண்ணா*
*மக்கள் புரட்சி இன்று பகை விரட்ட புறப்படுகிறதண்ணா*
*மக்கள் புரட்சிக்கு வித்திட்டவன் நீ தானே அண்ணா!*
*திலீபன் அண்ணா*
*நீ எங்கேயண்ணா போய்விட்டாய்*
*அகிம்சைப் பயணத்தின் அற்புத நாயகனே –எம்*
*தாய் நில தேசத்தின் விடுதலைப் பெரு நதியே திலீபன் அண்ணா*
*விடுதலைக்காய் ஒலித்த உன் நெருப்பு வரிகள்–மீண்டும்*
*எம் காதுகளில் கேட்டிட வரம் தந்திடு அண்ணா!*

*ம. வீரமணி*

## உயர்ந்த உள்ளம்

மெழுகென உருகி-தன்
மேனியை உருக்கி
மேதினிய வீரத்தால்
மேன்மையானார் எங்கள்
அண்ணன் திலீபன்

பல்கலைக்கழகத்தில்
பாடத்தை பாதியில்
எட்டத்தை விட்டு - எதிரி
கொட்டத்தை அடக்கும்-அவர்
திட்டத்தை நிறைவேற்ற

தேச விடுதலைக்காய்
பாச உறவுகளைச் சுமந்தபடி
பாசறை நோக்கிய நீண்ட
பயணத்தின்
பாதையில்

களம் பல கண்டு
காவியம் படைத்து
விழுப்புண் அடைந்தும்
விடுதலைக்காய்
அரசியலில் அயராதுழைத்து


அன்பான எம்
மக்களின் மனதை
பண்பால் வென்று
உயிர் பெற்ற உத்தமரே

சூரிய தேவனின்
கூரிய சிந்தனையின்
எண்ணக் கீற்றில்
எழுந்த உம் பெயரில்
உதயமாகிறது இந்த
உன்னத சேவை- இன்று

மக்களின் மனை தேடி-அவர்
மகிழ்வினில் கூடி
மறைவினில் வாடி
நாடி பிடித்து-எம்
நற்பணி தொடர்கிறது

கோட்டையில் புலிக்கொடி
ஏற்றினோம்
கொள்கையில் சாதனை
நாட்டினோம்
கோழைகள் இல்லை நாம்
என்பதைக் காட்டினோம் - இன்று
உம் பெயரில் சேவைகள் பல
ஆற்றினோம்


மருத்துவத்தின்
மகத்துவத்தில் - உம்பெயர்
மரமாகிப் பூவாகிப்
காயாகி கனிகிறது எம்
தலைவரின் தரிசனத்தில்
—— தே.நளாயினி




யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வு
நாம் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பின் சிறைக்குள் வாழமுடியாது எமது கடல் பரப்புக்களில்,
எமதுகாணிகளில், எமது வீடுகளில், எமது கோயில்களில் ,எமது
பள்ளிகளில் நாம் வாழமுடியாத-நாம் செல்லமுடியாத.சமாதானம் எமக்குவேண்டாம்
சமாதானத்தின்நோக்கம் உண்மையாக இருப்பின் சர்வதேசமே தமிழர் தாயகத்திலிருந்து
ஆக்கிரமிப்புப் படைகளை வெளியேற்றி தமிழர் சுதந்திரத்தை உறுதிசெய்! தமிழர்தாயகத்தில்
உயர் பாதுகாப்பு வலயம் எதற்கு-சர்வதேசமே இதை ஏற்றுக் கொள்கிறாயா,
உடன் அகற்ற நடவடிக்கை எடு-இல்லையேல் நாம் அகற்றவும்
ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டவும் தயாராகின்றோம்-வழிவிடு-புரட்சிகள் கூலிக்குச்
செய்யப்படுவதில்லை குருதிகளால் நெய்யப்படுகின்றன என்ற உண்மையை உறையவைக்க
எழுந்து வாருங்கள் தமிழர்களே!
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவின் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்-குருநகர், யாழ்ப்பாணம்.
(சி-12911)




யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30 சர்வதேச சமூகமே தமிழ் மக்களின் அதிகார பூர்வ
தமிழீழ அரசை அங்கீகரிக்கக்கோரி ஒட்டுமொத்த தமிழ் மக்களின் எழுச்சிக்குரலாய்
பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வு
எம்முடைய நிலத்தில் எம்முடைய
பலத்தில் தங்கி நிற்கும் தமிழீழ அரசை
உலகம் அங்கீகரிக்க உலகின் முற்றத்தில்
ஓங்கி குரல் கொடுப்போம்
குடாநாடே எழும்பட்டும் பகைவன்
உடலே நடுங்கட்டும் தமிழ் மக்கள்
அணிதிரண்டு வாருங்கள்....
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
தெல்லிப்பழை சிற்றூர்தி சேவைச் சங்கம்
தெல்லிப்பழை.


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர் -30 திலீபனே உன் எண்ணக்கனவுகளை
நனவாக்க தமிழர் நாம் தயாராகி விட்டோம் - உன் கண்கள் பார்த்திருக்கும்
தமிழீழ மண், உன் உதடுகள் நம்பிக்கையுடன் சொன்னவார்த்தைகளால்,
மக்கள் புரட்சி என்ற வடிவத்தை படைக்கும் இறுதிப் போருக்கு
நாம் ஆயத்தமாகின்றோம்.
பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வு
திலீபனே நீ உண்ணாமல், நீர் அருந்தாமல், எமக்காய்
உருகிமடிந்தாய், நாம் இந்த மண்ணில் சுதந்திரமுள்ளவர்களாய்
வாழ வேண்டும் என்பதற்காகவே
பகல் இரவு பன்னிரெண்டு நாட்கள் பட்டினியோடு
கிடந்தாய் மடிந்தாய், உன்னுடைய பசியும்
தாகமும் தமிழீழ சுதந்திரம் ஒன்றே அதுவும் வெகுவிரைவில் .
சர்வதேசமே உன்முன்னால் விடுதலை கோரி நீதியின்
குரல்கள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது உன்பதில் என்ன?
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
தியாகி அறக்கொடை நிறுவனம்
இல-527நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.
(சி.12815)


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30 பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வு
நாம் நாமாக வாழவே எங்கள் தாயகத்தில்
அனைத்து நிர்வாக அலகுகளுடன் இயங்கும்
தமிழீழ தனியரசை சர்வதேச சமூகம்
மதித்து அங்கீகரிக்கவேண்டும்.
சோம்பிக் கிடந்த
குரல் அல்ல- இது
இடியென முழங்கும்
தமிழ் மக்களின் உள்ளக்குமுறல்
கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக எமது உரிமைக்காக ஒரு இலட்சத்துக்கும்
மேற்பட்ட பொதுமக்களையும் பதினெட்டாயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளையும்
கணக்கிட முடியாத பொருளாதார வளங்களையும் இழந்து உறுதியாகவும்
இறுதியாகவும் நியாயம் கேட்கின்றோம்.
அனைத்துலக சமூகமே, தமிழ் இனத்தின் விடிவிற்கு நீ தரப்போகும் பதில் என்ன?
அணி அணியாய் தமிழ் இனமே உரிமைக்கோசமிட்டு எழுந்துவா...
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப. 3.00 மணி
வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு
சங்கங்களின் சமாசம் - திக்கம் பருத்தித்துறை
(சி.12844)


கரப்பந்துப் போட்டியில் முதலிடம் பெற்ற கிருஸ்ணபாரதி அணி


கரப்பந்துப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற இளந்தென்றல் அணி


பூப்பந்தாட்ட ஒற்றையர் போட்டியில் முதலிடம் பெற்ற தர்சன்

## கிளி. நியூஸ்ரார் வி.கழகம் நடாத்திய
# மாவீரர்கள் நினைவான சுற்றுப் போட்டிகள்
# இளந்தாரகை, கிருஸ்ணபாரதி அணிகள் சம்பியன்

கிளிநொச்சி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையின் ஆதரவுடன் மாவீரர்கள் நினைவாக நடாத்திய மென்பந்து கிரிக்கெட், கரப்பந்து, பூப்பந்து போட்டிகள் நேற்று பரிசளிப்பு வைபவத்துடன் நிறைவு பெற்றது.

உதயநகர் நியூஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் மற்றும் கரப்பந்து போட்டிகளின் இறுதிப் போட்டியில் முறையே தருமபுரம் இளந்தாரகை, கிருஷ்ணபாரதி அணிகள் சம்பியனாகின.

முதலில் நடைபெற்ற மேஜர் துளசி ஞாபகார்த்த மென்பந்து துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் விசுவமடு தோழர்கள் அணியை எதிர்த்து தருமபுரம் இளந்தாரகை அணி மோதியது.

பரபரப்பான இப்போட்டியில் இளந்தாரகை அணி நான்கு ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தோழர்கள் அணி இளந்தாரகை அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவரில் மயூரன், துவாரகன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் உதவியுடன் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

மயூரன் நான்கு ஆறு ஓட்டம் அடங்கலாக 39 ஓட்டங்களையும், துவாரகன் 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் தினேஷ் மூன்று விக்கெட்டுக்களையும், உதயன் இரண்டு விக்கெட்டுக்களை யும், தர்மேந்திரா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இதில் கிருபராஜ் ஒரு ஓவரில் 27 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

126 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தோழர்கள் அணி சொற்ப ஓட்டங்களுக்குள் இரண்டு விக்கெட்டுக்களை இழந்தாலும் மூன்றாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த சுகிர்தன் - தினேஷ் அபாரமாக விளையாடி ஸ்திரமான நிலைக்கு அணியை இட்டுச் சென்றதோடு போட்டியில் பெரும் பரபரப்பு ஏற்படவும் வழி செய்தனர். ஆயினும், ஆறு விக்கெட் இழப்பிற்கு 120 ஓட்டங்களையே தோழர்கள் அணி பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் சுகிர்தன் 24 ஓட்டங்களையும், தினேஷ் 30 ஓட்டங்களையும், தர்மேந்திரா 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சாந்தன், மயூரன் தலா இரண்டு விக்கெட்டுக் களையும், யோகிசன், பிரபு தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக மயூரன் தெரிவானார். போட்டித் தொடரின் நாயகனாக தோழர்கள் அணியின் தர்மேந்திரா தெரிவானார். இப்போட்டித் தொடரின் சிறந்த அணியாக மல்லாவி ஜொலிஸ்ரார் அணி தெரிவானது.

இதேவேளை, கட்டன் அன்பு ஞாபகார்த்த கரப்பந்து போட்டியில் கிருஸ்ணபாரதி அணி சம்பியனானது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இளந்தென்றல் அணியை கிருஸ்ணபாரதி எதிர்த்தாடியது.

கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் பூப்பந்து, திடலில் நடைபெற்ற கட்டன் இன்பராஜ் ஞாபகார்த்த பூப்பந்து போட்டியில் ஒற்றையர் போட்டியில் தர்சன் முதலாம் இடத்தையும், இரட்டையர் போட்டியில் தர்சன்-றமணன் ஜோடி முதலாம் இடத்தையும் பெற்றனர்.

வெற்றி பெற்ற வீரர்கள், அணிகளுக்கான பரிசில்களை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் பலரும் வழங்கிக் கௌரவித்தனர்.


மென்பந்துப் போட்டியில் முதலிடம் பெற்ற இளந்தாரகை அணி


மென்பந்துப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற தோழர்கள் அணி


தொடர் நாயகன்


ஆட்ட நாயகன்

## பிற்போடப்பட்டது

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த கிளிநொச்சி ம.வி. கடினப்பந்து அணியினரை பாராட்டும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை மறுதினத்திற்கு (28.09.2005) பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## தியாகி திலீபன் நினைவாக நடந்த மாபெரும் விளையாட்டு விழா

தியாகி லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வட்டக்கச்சி அரசியல்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் வழுக்கு மரம் ஏறுதல், சாக்கோட்டம், முட்டி உடைத்தல், சமநிலை ஓட்டம், உணவு உண்ணுதல், பெட்டி இழைத்தல், தாச்சிப் போட்டி, கயிறிழுத்தல், கிடுகுபின்னுதல், கபடி, கரப்பந்து ஆகிய போட்டிகள் நடை பெற்றது. இப்போட்டியில்வெ வற்றிபெற்ற வீரர்களுக்கு தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் இறுதிநாளான இன்று வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும். (12)

## ஜனசக்தி சுழல் கிண்ணத்தை மனோகரா அணி கைப்பற்றியது

ஜனசக்கதி சுழல் கிண்ணத்திற்கான இறுதியாட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுசம்பியனானது.

நேற்று முன்தினம் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆரம்பம்முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டம்தொடங்கிஐந்தாவது நிமிடத்தில் கோல் பெறுவதற்கான சந்தர்ப்பம் பொமேர்ஸ் அணியினருக்குகிடைத்த போதும் கோல் பெறும் வாய்ப்பை இழந்தனர். தொடர்ந்து இரு அணி வீரர்களும் கோல் பெறுவதற்கு பலத்த முயற்சி எடுத்தபோதும் பலன் கிடைக்கவில்லை. இருப்பினும் ஆட்டத்தின் 15,23 ஆவதுநிமிடங்களில் பொமேர்ஸ் முன்னிலை வீரர்களுக்கு கோல் பெறுவதற்கு அரிய வாய்ப்புக் கிடைத்தபோதிலும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தாத நிலையில் கோல் பெறும் வாய்ப்பை இழந்தனர். இதனால் முதல் பாதி ஆட்டம் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதிஆட்டம்தொடங்கி எட்டாவது நிமிடத்தில் மனோகராஅணியின் முன்னிலை வீரர் தனக்கு கிடைத்த பந்தை மிகவும் சாதுரியமாக பயன்படுத்தி கோல் ஒன்றை அணிக்காக பெற்றுக்கொடுத்தார். இதனால் ஆட்டம் மேலும் விறுவிறுப்படையத் தொடங்கியது. இரு அணி வீரர்களும் சளைக்காமல் கோல் பெறுவதற்கு முழுப்பலத்தையும் பயன்படுத்த முயற்சித்த போதும் கோல் பெற முடியவில்லை.இந்த நிலையில் மனோகரா விளையாட்டுக்கழகம் பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை 1-0 என்ற கோல்கணக்கில்வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர் தினத்தை சிறப்பாக கொண்டாடுமுகமாக இம்மாவட்ட ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கு இடையேயான விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. மெய்வல்லுநர் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

பெருவிளையாட்டுப் போட்டிகள் கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறும் பெருவிளையாட்டுக்களில் வலைப்பந்து, உதைபந்து என்பன அன்றுநடைபெறும் கிளித்தட்டு, சதுரங்கம் என்பன கிளி. மத்தியகல்லூரியில் 30ஆம் திகதி நடைபெறும். இங்கு பெருவிளையாட்டுப் போட்டிகள் யாவும் கோட்டமட்ட குழுக்களுக்கிடையே நடைபெறும். போட்டியாளர்கள் உரிய திகதியில் உரிய இடத்தில் குறித்த நேரத்தில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.



## ஷேவாக்கை வானளாவ புகழும் சப்பல் அணியின் தலைவர் பதவிக்கும் உரியவராம்

சௌரவ் கங்குலி மீது கடும் புகார்கள் கிளப்பிய அடுத்த நாளே, வீரேந்தர் ஷேவாக்கின் திறமையை வானளாவ புகழ்ந்திருக்கிறார் இந்திய கிரிக்கெட் பயிற்சியாளர் கிரேக் சப்பல். ஷேவாக் திறமையை அணி இன்னும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட்டில் இப்போது சச்சின் டெண்டுல்கர், ராகுல் ராவிட், வீரேந்தர் ஷேவாக் ஆகியவர்களைவிட, கிரேக் சப்பல் வெகு பிரபலம். இந்திய அணிக்கு தலைவர் பொறுப்பு வகிக்க தகுதியில்லாதவர் என சௌரவ் கங்குலியை மிகக் கடுமையாக விமர்சித்ததன் மூலம் இந்தியா முழுவதும் அறியப்படும் நபராகிவிட்டார். விமர்சனம் செய்து ஒரு நாள் முடியவில்லை ஷேவாக் பற்றி பிரமாதமாகப் புகழ்கிறார்.

அடுத்த 2007 உலகக் கோப்பையை இலக்காகக் கொண்டு இந்திய அணியைத் தயார் செய்து கொண்டிருக்கின்றேன். நமது இலக்கு எல்லாம் உலகக் கோப்பைதான். இந்த இலக்கை மையமாகக் கொண்டு 18 வீரர்களை நான் தேர்வு செய்து வைத்திருக்கின்றேன். இது பற்றி இந்தியத் தேர்வுக்குழு நிர்வாகிகளிடம் கூட நான் பேசவில்லை. விரைவில் விவாதிப்பேன்.

சிம்பாப்வே தொடரில் இர்பான் பதான் ஆட்டம் அருமை. அவரிடம் துடிப்பு இருக்கிறது. சாதிக்க வேண்டும் என்ற வெறி, உத்வேகம் இருக்கிறது. இர்பான் போல் 15 வீரர்கள் இருந்தால், இர்பானிடம் இருக்கும் அந்த வெறி மற்ற வீரர்களிடமும் இருந்தால் இந்திய அணியை யாரும் அசைக்க முடியாது.

அதேபோல், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய மற்றொரு வீரர் வீரேந்தர் ஷேவாக். அவரிடம் ஏராளமான திறமை புதைந்து கிடக்கிறது. அதை இன்னும் முழுமையாக நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவரை நான் முழுமையாக மாற்றத் திட்டமிட்டிருக்கின்றேன். அதேசமயம் அளவுக்கதிகமான பாரம் கொடுத்து அவரது இயல்பான திறமையைப் பாதித்துவிடவும் கூடாது.

அவரிடம் இருந்து இந்திய அணிக்கு இன்னும் நிறைய ஆகவேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் அணியில் ஷேவாக் முக்கியத்துவம் வாய்ந்த வீரராக இருப்பார். சிறப்பாக விளையாடியும் பெரிய ஓட்டம் எடுக்கத் தவறுகிறார் ஷேவாக். அவரிடம் நான் நிறைய பேசவேண்டியிருக்கிறது. இந்திய அணியில் இப்போது நிலவும் சிறு சிறு பிரச்சினைகளுக்காக அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. சச்சின் டெண் டுல்கர் வருகைக்குப் பிறகு எல்லாம் மாறிவிடும்.

சச்சின் சாதனை வீரர். அவர் வந்தால் அணியின் பலம் பல மடங்கு பெருகிவிடும். இலங்கை, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் என இனி நமக்கு அடுத்தடுத்து நிறையச் சவால்கள் காத்திருக்கின்றன. அனைத்தையும் சிறப்பாகச் செய்து காட்ட வியூகங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார் சப்பல்


## கிரிக்கெட் விளையாட்டுக்கு கடவுள் கொடுத்த மிகப்பெரிய பரிசு ஷேன் வோர்ன்


சச்சின்

கிரிக்கெட் விளையாட்டுக்கு கடவுள் கொடுத்த மிகப் பெரிய பரிசு ஷேன் வோர்ன் எனப் புகழ்கிறார் சச்சின்.

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் தோல்விக்குப் பின் அவுஸ்திரேலிய அணியின் நிலைமை பரிதாபமாகிவிட்டது. புகழின் உச்சியில் இருந்த இந்த அணி தற்போது பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. இந்நிலையில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் சூப்பர் சீரிஸ் தொடரில் உலக 11 பேர் அணியிடம் அவுஸ்திரேலியா எளிதில் வீழ்ந்துவிடும் எனப் பலர் கருத்து கூறுகின்றனர். இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர். இது குறித்து இவர் அளித்த பேட்டியில்,

உலகிலே மிகச் சிறந்த அணி அவுஸ்திரேலியா. கடந்த இருபது ஆண்டுகாலமாக அவர்களின் விளையாட்டு முறை மற்ற அணிகளைக் காட்டிலும் வேறுபட்டு இருக்கின்றது. துடுப்பாட்டம், பந்து வீசு, களத்தடுப்பு என அனைத்துத் துறைகளிலும் வேகமாக செயற்படுபவர்கள். குறிப்பாக, மெக்ராத், வோர்ன் இருவரும் நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்குகின்றார்கள். அசத்தலாக பந்து வீசி விக்கெட் குவிக்கும் இவர்களை 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றால் யாருமே நம்பமாட்டார்கள். சுழல் மன்னனாக திகழும் ஷேன் வோர்ன் கிரிக்கெட்டுக்கு கடவுள் அளித்துள்ள பரிசு. எத்தனை வீரர்களால் இவரைப் போல் பந்து வீச முடியும். சொல்லுங்கள்? ஆனால், வோர்னின் தனிப்பட்ட வாழ்க்கையில் பல பிரச்சினைகள் இருப்பது கவலையளிக்கிறது. இதை எல்லாம் மீறித்தான் அவர் களத்தில் சாதிக்கிறார் என்றார் சச்சின்.



### சிந்தனைக்கு

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் திலீபன் செய்திருக்கிறான்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 26.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## தியாகி திலீபன் புகழ் நீடு வாழும்!

தியாகி திலீபனின் நினைவு நாள் தமிழர் தாயகமெங்கிலும் உணர்வு பூர்வமாக நினைவுகூரப்படுகின்றது. 12 நாட்கள் உண்ணா நோன்பிருந்து தியாகி திலீபன் சாவடைந்து 18 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மட்டுமல்ல, இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் உள்ளவரையில் நினைவுகூரத்தக்கதான அளப்பெரும் தியாகத்தையும், அர்ப்பணிப்புக்களையும் தமிழ் மக்களுக்காக தியாகி திலீபன் செய்துள்ளாரெனின் மிகையாகாது.

விடுதலைப்புலிகள் இயக்கம் தீவிரமானது, போராளிகள் கடும்போக்காளர்கள் என்பது பொதுப்படையாகத் தெரிவிக்கப்படும் ஒன்று. இது நியாயமானது ஒன்றும் கூட. ஏனெனில் தமது உரிமைக்கான போராட்டத்தில் அவர்கள் விட்டுக்கொடுப்பற்ற வகையில் தீவிரமாகவே போராடியுள்ளனர். செயற் பட்டும் வருகின்றனர்.

ஆனால், விடுதலைப்புலிகள் தமது உரிமைக்கான போராட்டத்தில் காட்டும் தீவிரமானது தனியாக ஆயுதப் போராட்ட வழிமுறையில் அதாவது வன்முறை அடிப்படையானது என்று மட்டும் முடிவு செய்வதுதான் தவறானது. விடுதலைப்புலிகள் தமது உரிமைக்கான போராட்டத்தில் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள் எதுவாகினும்சரி அதில் தீவிரமானவர்களாக இருந்துள்ளனர், இருக்கின்றனர் என்பதே உண்மையும் யதார்த்தமுமாகும்.

அத்தோடு தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்து சாவடைந்தமை ஒரு குறியீடு போன்றமைந்ததே. இதேவழியைப் பின்பற்றவும், தொடரவும் விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராகவும் இருக்கத்தான் செய்தது. ஆனால், "பாத்திரம் அறிந்து பிச்சை போடு"என்பது போன்று எமது அர்ப்பணிப்பு தியாகத்தைப் புரிந்து கொண்டு அதற்குரிய பதில் நடவடிக்கைகளை எதிர்த்தரப்பு மேற்கொள்ளத் தயாராக இல்லாத நிலையில் அதேவழிமுறையை பின்பற்றுவது பொருத்தமானதாக இருக்கமாட்டாது.

அவ்வாறு இருந்தும், அன்னைபூபதியும் சாகும்வரை உண்ணா நோன்பிருந்து தனது உயிரைத் தியாகம் செய்தார். ஆனால் அவரின் உயிர்க் கொடையையும் அன்று தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத் தியவர்கள், செலுத்தவிளைந்தவர்கள் கண்டு கொள்ளவில்லை. இந் நிலையிலேயே சாத்வீகப் போராட்டம் என்பதற்கு அதற்குரிய மதிப்பளிக்கப்படாத நிலையில் அப் போராட்டத்தின் தார்ப்பரியம் எதிர்த்தரப்பால் புரிந்து கொள்ளப்படாத நிலையில் தீவிரமான அகிம்சைப் போராட்டங்கள் கைவிடப்பட்டன.

அதாவது ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல, சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டமும் – அதிலும் நீராகாரம் கூட அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் என்பதும் தீவிரமான போராட்டம்தான். அதாவது உடலை வருத்துவதும் உயிரைக் கொடுப்பதும் தீவிரமான போராட்டமே. ஆகையினால், விடுதலைப் புலிகள் தற்கொடைப் போராளிகளாக உரிமைப் போராட்டத் தில் ஈடுபடுவது மட்டும்தான் அதிதீவிரவாதம் என் பதல்ல. சாகும்வரை உண்ணா நோன்பு என்பதும் அதிதீவிரம்தான்.

இத்தகைய அதிதீவிரவாதப் போக்கை விடுதலைப்புலிகள் பின்பற்றுவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. அதாவது, தமிழ் மக்கள் சுமார் இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக மிதமானதும், சாத்வீக ரீதியிலுமான போராட்டங்களை ஏற்கனவே நடத்தியுள்ளனர். ஆனால், அவற்றால் தமிழ் மக்களால் தமது உரிமைகள் எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஒன்று தமிழ் மக்களின் மிதமான போராட்டங்கள் இரும்புக் கரம் கொண்டு பேரினவாத சக்திகளினால் நசுக்கப்பட்டன. அன்றி பேரின வாத ஆட்சியாளர்களினால் பேச்சுவார்த்தை, உடன்பாடுகள் என்ற ரீதியில் தணிக்கப்பட்டன. பின்னர் தமிழ் மக்கள் ஏமாற்றப் பட்டனர். இந்நிலையில் தமிழர் தரப்பு எத்தகைய போராட்டம் ஆயினும் அதனை தீவிரத் தன்மையுடன் நடத்தவேண்டிய நிர்ப் பந்தத்திற்கும் கட்டாயத்திற்கும் உள்ளாக்கியது என்பதே உண்மையாகும்.

ஆனால்அடிப்படையில் தமிழ் மக்கள் தீவிரவாதத்தில் காதல் கொண்டவர்கள் அல்ல. உயிர்களைப் பொருட்படுத்தாதவர்களும் அல்ல. அன்புப் பிணைப்புக்கொண்ட குடும்ப வாழ்வுடன் கூடியதும், உயர்ந்த கலாச்சாரப் பண்புகள் பாரம்பரியங்கள் கொண்டதுமே தமிழ் மக்களின் வாழ்க்கைமுறையாகும். தமிழ் மக்கள் அமைதியான வாழ்க்கை முறைகளைக் கொண்டவர்கள் என்பதை இலங்கையை ஆட்சி புரிந்த பிரித்தானியர்களின் குறிப்புக்களில் இருந்தே உலகத்தவர் புரிந்துகொள்ள முடியும்.

ஆகையினால், தமிழ் மக்கள் அரசியல் தொடர்பான விடயங்களில் தீவிரமான, கடுமையான முடிவுகளை எடுக்க நிர்ப்பந் திக்கப் பட்டவர்கள் என்பதே யதார்த்தமாகும். இதனை வைத்துக் கொண்டு மக்களின் குண நலன்,பண்பாடு, கலாச்சாரம் என்பன குறித்து முடிவுகளுக்கு வருதல் தவறானதாகவே இருக்கும். தற்பொழுது தமிழ் மக்கள் வெளிப்படுத்தும் தீவிரவாதம் அவர்கள் தமது இருப்பை நிலை நிறுத்துவதற்குத் தவிர்க்க முடியாது எனக் கொள்ளும் வழிமுறையே ஆகும்.

ஆயுதப் போராட்டத்தில் உயிர்த் தற்கொடைவரையில் சென்ற விடுதலைப்புலிகள் சாத்வீகப் போராட்ட வழிமுறையில் சாகும்வரை உண்ணா நோன்பிற்குத் தயாராக உள்ளனர் என்பதில் இருந்தே இதனைப் புரிந்துகொள்ள முடியும். இந்தவகையில் தியாகி திலீபனின் சாகும்வரை உண்ணாநோன்பானது தமிழ் மக்களின் உரிமைக்காக செய்யப்பட்ட அளப்பெரும் தியாகமாகும். இத்தியாகமானது போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரியது. இதனால் தியாகி திலீபனின் புகழ் தமிழ் மக்கள் மத்தியில் பல நூற்றாண்டுகள் கடந்தும் நீடுவாழும்.




# வங்கிப் பணியாளர் நியமனம் தமிழர்களுக்குப் பாரபட்சம்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சேபம்

சிறிலங்காவின் வங்கிகளுக்கான பணியாளர் தேர்வில் தமிழர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் இது தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பியுள்ள தொலைநகலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்காவின் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் வடக்கு கிழக்குப் பிரதேச கிளைகளுக்கான பணியாளர் தேர்வு அண்மையில் நடந்தது.

மொத்தம் 600 பணியிடங்களில் வடக்கு கிழக்கிற்கு நியமிக்கப்பட்டவர்கள் 45 பேர் இவர்களில் 38 பேர், திருகோணமலை மாவட்டத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த 38 பேரில் இரண்டு பேர் மட்டுமே தமிழர்கள்.

மக்கள் வங்கி மொத்தம் 750 பேரைத் தேர்வு செய்தது. இதில் 21 பேர் திருமலை மாவட்டக் கிளைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களிலும் நான்கு பேர் மட்டுமே தமிழர்கள். இதர 17 பேரும் சிங்களவர்கள், திருகோணமலை மாவட்ட வங்கிகளை பயன்படுத்துவோரில் 80 விழுக்காட்டினர் தமிழர்களே. ஆனால் வங்கிகளுக்கான புதிய பணியாளர்களோ 53 பேர் சிங்களவர்கள். ஆறு பேர் மட்டுமே தமிழர்கள்.

வடக்கு கிழக்கு வங்கிகளுக்கான பணியாளர்கள் கூடுதலாக நியமிக்கப்பட வேண்டும். அப் பணியிடங்களிலும், தமிழர்களையே நியமனம் செய்ய வேண்டும். சிறிலங்கா அரசிலிருந்து தமிழ் இளைஞர்களை வேறுபடுத்திப் பார்க்கின்ற இத்தகைய போக்குகள் தான் தமிழர்களின் சுயாட்சி கோரிக்கைக்கு வழி வகுக்கின்றது. என்றும் சம்பந்தன் அதில் சுட்டிக் காட்டியுள்ளார். (25)

# தேர்தல் தொடர்பான சட்டங்கள் வலுவான முறையில் அமுல் படுத்தப்படும்

## தேர்தல் செயலக பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

தேர்தல் தொடர்பான சட்டங்களை மிகவும் வலுவான முறையில் அமுல் படுத்தப் போவதாக பொலிஸ் தேர்தல் செயலகத்தின் பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்தின் கீழ் பொலிசார் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர்.பொலிசார் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பைத் தர வேண்டும்.நிலைமையை அவதானித்து பொலிசார் இந்த தேர்தல் சட்டங்களை அமுல் படுத்துவதில் முனைப்புடன் ஈடுபடுவர் என்றும் பொலிஸ் தேர்தல் செயலகத்தின் பிரதி பொலிஸ் மாஅதிபர்காமினி நவரட்ண தெரிவித்தார். (32)

# மகிந்த ராஜபக்ஷவின் பிரச்சாரக் கூட்டங்களில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு இடமில்லை

## எல்லாவல மேத்தானந்த தேரர் அதிருப்தி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திர கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கும் பிரச்சார கூட்டங்களுக்கு அழைக்கப்படாமை குறித்து ஜாதிக ஹெல உறுமய அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

ஜே .வி. பியின் அழுத்தம் காரணமாகவே இந்த அழைப்பு விடுக்கப்படவில்லை என ஊடகங்களில் வெளியான தகவல் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரரை தொடர்பு கொண்டபோது ஊடகங்களை விமர்சித்த அவர் இது குறித்து பேச மறுத்து விட்டார். இதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேத்தானந்ததேரரை இது குறித்து வினவியபோது தமது கட்சியை ஜே.வி.பிசவாலாக எண்ணக்கூடாது எனத் தெரிவித்தார். தமக்கு வாக்குப்பலம் இல்லை என ஜே.வி.பி எண்ணுவது தவறானது என்றும் அவர் குறிப்பிட்டார்.(32)

# ஒற்றையாட்சிக்குள் அரசைத்தவிர எவரும் படைகளை வைத்திருக்க முடியாது

## பதில்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

ஒற்றையாட்சிக்குள் அரசாங்கத்தைத் தவிர வேறு எவரும் படைகளை வைத்திருக்கமுடியாது என பதில் பாதுகாப்பமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.போர் நிறுத்த உடன்பாட்டின் கீழ் நன்மைகளை விட தீமைகள் அதிகம் என குறிப்பிட்ட அவர், போர் நிறுத்த உடன்பாட்டில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவித்தார்.நேற்று முன்தினம் பேருவளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். (32)

# அவுஸ்திரேலியா மெல்போர்ன் நகரில்
# தியாக தீப கலை மாலை நிகழ்வு

அவுஸ்திரேலிய மெல்போர்ன் நகரில் தியாக தீப கலை மாலை நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பன்னிரு நாட்கள் உண்ணா நோன்பிருந்து தியாக மரணமடைந்த லெப்.கேணல் திலீபன், முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப். மாலதி, தீருவிலில் சங்கமமான பன்னிரு வேங்கைகள், கேணல் சங்கர், கேணல் குயிலன் ஆகியோரின் நினைவாக இந் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, கலை பண்பாட்டுக் கழகம் இந் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன.

அவுஸ்திரேலிய தேசியக் கொடியினை மாணவர் அமைப்பினைச் சேர்ந்த செல்வன் கௌரிகரன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டாளர்களில் ஒருவரான நாதன் ஏற்றினார். பொதுச் சுடர், ஈகச்சுடர் ஏற்றலுடன் அமைதி வணக்கமும் இடம்பெற்றது.



நிகழ்வுக்கு வருகை தந்திருந்த அனைவரும் உணர்வுடன் மலர் வணக்கம் செலுத்தினர்.

நிருத்தசொரூபி தர்மகுலேந்திரனின் மாணவியர் மற்றும் மீனா இளங்குமாரனின் மாணவ, மாணவியர் எழுச்சி நடனங்களை வழங்கினர்.

சிவரூபி யோகராஜாவின் இந்திய கலைக் கல்லூரி மாணவர்கள் திலீபனின் நினைவு சுமந்த பாடல்களை வழங்கினர்.

மெல்போர்ன் கலை பண்பாட்டுக்கழகத்தினர் தயாரித்து வழங்கிய வழக்காடு மன்றமும் நாடகமும், இந் நிகழ்வில் நடைபெற்றன.

# அதிரடிப்படையின் காவலரண் மீது இனந் தெரியாதோர் தாக்குதல்

திருக்கோவில் - பொத்துவில் சந்தியிலுள்ள பொது வைத்திய சாலைக்கு அருகில் உள்ள சிறப்பு அதிரடிப் படையினரின் காவலரண் ஒன்றின் மீது நேற்றிரவு 8.00 மணியளவில் இனந்த தெரியாதவர்களினால் தாக்குதல் நடாத்தப்பட் டுள்ளது.

இதன்போது சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என அதிரடிப் படையினர் தெரிவித்துள்ள னர். தாக்குதல் நடாத்தப்பட்டதைத் தொடர்ந்து சிறப்பு அதிரடிப் படையினர் அப்பகுதியில் கண்மூடித் தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

# மகிந்தவுக்கு ஆதரவாக 7 கூட்டங்களில் சனாதிபதி சந்திரிகா பேச ஏற்பாடு

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து பிரச்சாரம் செய்ய சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கிலிருந்து கொழும்புக்குத் தொடர்புகொண்டு பேசிய சந்திரிகா ஏழு பொதுக்கூட்டங்களை நாடு தழுவிய அளவில் ஏற்பாடு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகாவின் இம்முடிவை அடுத்து பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது என்றும் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவுடனான ஒப்பந்தங்களைச் சுதந்திரக்கட்சி மறுபரிசீலனைசெய்யாது என்றும் தெரிகிறது.

நியூயோர்க்கில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரும் தனது சகோதரருமான அநூராவுடன் நடத்திய நீண்ட ஆலோசனைக்குப் பிறகு சந்திரிகா இம்முடிவை மேற்கொண்டுள்ளார்.

மகிந்தவின் தேர்தல் ஒப்பந்தங்களை மிகக் கடுமையாக எதிர்த்து நியூயோர்க் செல்லும் முன்பாக சந்திரிகா கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு மகிந்த ராஜபக்ஷ பதிலளிக்கவில்லை. நியூ யோர்க்கிலிருந்து மகிந்தவுடன் பேசுவதற்கு முயன்ற நிலையிலும் மகிந்த ராஜபக்ஷ பேசவில்லை. இந்த நிலையில் சந்திரிகா வின் ஆதரவு முடிவு மகிந்தவை மகிழ்ச் சிப்படுத்தக் கூடும் என்று சுதந் திரக் கட்சியினர் கூறி வருகின்றனர்.

## இணைத்...

தலைமை நாடுகள் கூட்டத்தின் போது அமெரிக்காவில் இருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கே. நட்வர்சிங் அழைக்கப்பட்டார். ஆனால் அவர் ஏற்கனவே திட்டமிட்டிருந்த பயணங்களினால் அவர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் இந்தியா பங்கேற்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி, இந்திய அமைச்சர் நட்வர்சிங் திட்டமிட்டபடியான சந்திப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்றும் அக்கூட்டத்தில் பங்கேற்கும் திட்டம் எதுவும் இந்தியாவிடம் இல்லை என்றும் தெரிவித்தார்.

## லெப்.கேணல்...

இவரின் வித்துடல் அவரின் இல்லத்திற்கு நேற்று எடுத்துவரப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக கைவேலி தமிழ் வித்தியாலயத்தில் வைக்கப்பட்டது.

இங்கு பொதுச் சுடரினை லெப் கேணல் நவம் அறிவுக் கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் ஏற்றினார். சுடரேற்றி மலர் மாலையை அவரது துணைவியார் அணிவித்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து தலைமையுரையும் நவம் அறிவு கூடப் போராளி அரும்பொருளின் கவிதையும் இடம்பெற்றது. வீரவணக்க உரையை லெப் கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் நிகழ்த்தினார்.தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றதுடன் முள்ளியவளை துயிலும் இல்லத்தில் புனித விதைகுழியில் பூரண இராணுவ மரியாதையுடன் வித்துடல் விதைக்கப்பட்டது.

*-சுனாமியை அடுத்து பிரிட்டிஷ் வழங்கிய-*

# பேருந்துகளை முடக்கி வைத்துள்ள அமைச்சர் பெர்ணான்டோ புள்ளே!

சுனாமி மீளமைப்புப் பணிகளுக்காக இங்கிலாந்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட 34 பேருந்துகளை சிறிலங்கா அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே இதுவரை போக்குவரத்துச் சபையிடம் ஒப்படைக்கவில்லை.

இங்கிலாந்து நிறுவனம் ஒன்று 17 சொகுசு பேருந்துகள் உட்பட 34 பேருந்துகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர பகுதிகளின் போக்குவரத்துப் பாவனைக்காக அனுப்பி வைத்தது.

ஆனால், இந்தப் பேருந்துகள் இன்னமும் சிறிலங்கா அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயிடம் தான் இருக்கின்றன. சிறிலங்கா போக்குவரத்துச் சபையிடம் இவை ஒப்படைக்கப்படவில்லை.

சிறிலங்காவுக்கு இப்பேருந்துகள் வந்தடைந்துவிட்டன. ஆனால், போக்குவரத்துச் சபையிடம் இப்பேருந்துகள் ஒப்படைக்கப்படவில்லை என்று போக்குவரத்து சபையின் தலைவர் டிடோர் தயாரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோவுக்கு பல முறை கடிதம் அனுப்பியும் பேருந்துகளை அமைச்சர் கையளிக்க வில்லை என்றும் டிடோர் தயாரட்ண கூறினார்.

இதனிடையே இப்பேருந்துகள் அனைத்தும் தன்னிடம் தான் இருப்பதாகவும் தனது தனிப்பட்ட வேண்டுகோளையடுத்து இப் பேருந்துகளை அவர்கள் அனுப்பி வைத்ததாகவும் அந்த நிறுவனப் பிரதிநிதிகள் விரைவில் சிறிலங்கா வருகை தந்து பேருந்துகளை ஒப்படைப்பார்கள் என்றும் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே கூறினார்.

இப்பேருந்துகள் கொழும்பு, நீர்கொழும்பு, மாத்தறை கடலோரப் பிரதேசங்களில் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுனாமி ஏற்பட்டு ஓராண்டாகப் போகும் நிலையிலும் இனி எப்போது ஆலோசனை நடத்தி எப்போது பேருந்துகளை அமைச்சர் கையளிப்பார் என்று போக்குவரத்து சபையினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

## சுழிபுரம்...

யூடாகச் செல்லும் காரைநகர் பிரதான வீதியோரமாக சுமார் ஏழு அடி நீளமான குழி ஒன்றைத் தோண்டி அதற்குள் பெட்டி ஒன்றை புதைத்து விட்டுச் சென்றனர்.

பலத்த இராணுவப்பாதுகாப்புடன் வந்த இராணுவத்தினர் பெட்டி ஒன்றை புதைத்து விட்டுச் செல்வதைக் கண்ட மக்கள் படையினர் அவ் இடத்தைவிட்டுச் சென்றதும் இராணுவத்தால் புதைக்கப்பட்ட பெட்டியை தோண்டிப் பார்க்க முயற்சித்தபோதும் அதன் மூலம் ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்கு அஞ்சி எவரும் அக் குழியை தோண்டிப் பார்க்க வில்லை.

இந் நிலையில் இது பற்றி பொலிசாருக்கும்,யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் பொது மக்களால் தகவல் தெரிவிக்கப்பட் டது.

எனினும் இவர்கள் எவரும் சம்பவ இடத்துக்கு வராததையடுத்து பொறுமை இழந்த மக்கள் குழியை தோண்டி அதனுள் இருந்த பெட்டியை பிரித்துப் பார்த்த போது அதனுள் சில கழிவுப் பொருட்களே இருந்துள்ளன.

யாழ்.குடாநாட்டில் பொங்குதமிழ் எழுச்சிக்கான ஏற்பாடுகள் பரவலாக இடம்பெற்று வரும் நிலையில் பொதுமக்களை பீதி கொள்ளவைத்து மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு விசமத்தனமான செயலாகவே தாம் இதனைக் கருதுவதாக சம்பவ இடத்தில் நின்றிருந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறியதுடன் பொது மக்களை அச்சுறுத்தும் விதமாக மேற் கொள்ளப்பட்ட இச் செயலுக்கு அவர் கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்.(03)

## வவு.தேசிய...

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் களான சகணகரட்ணம், சிவநாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்னாட் ஆகியோர் உட்பட பல அரச அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப் புக்களின பிரதிநிதிகள் உட்பட பெரும ளவானோர் கலந்துகொண்டனர்.

இக் கலந்துரையாடலின் முடிவில் தமிழ்தேசிய எழுச்சி செய லணி அமைக்கப்பட்டது. இதன் தலைவராக எஸ்.என்.ஜி நாதன், செயலாளராக கிறிஸ்தோபர், பொரு ளாளராக தேவராஜா ஆகியோர் உட் பட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (10)

## யாழ்...

காரைநகரில் அவர்கள் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது எனக்கூறி திரும்பிச் செல்லுமாறு பணித்தனர்.

எனினும் இதனை மாணவர்கள் ஏற்காததினால்இரு தரப்பினருக்குமிடையே முறுகல் நிலை தோன்றியது. இருப்பினும் மாணவர்களது கருத்துக்களை ஏற்காது அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு பொலிசார் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்துள் ளனர்.

கடந்த வெள்ளியன்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவரைப் படையினர் முகமாலை யில் தடுத்துவைத்திருந்தவேளை ஏனைய மாணவர்கள் திரண்டு சென்று அவரை மீட்டுச்சென்றமை தெரிந்ததே.(33)

## நோர்வேயின்...

அதேவேளை, சமாதான நடவடிக்கைகளில் எந்த விதமான மாற்றமும் இல்லை என தெரிவித்த இலங்கைக்கான நோர்வே தூதுவராலயத்தின் பேச்சாளர் கேஸ்ரி ரொம்ஸ்டெல் வழமையான முறையில் சமாதான முன்னெடுப்பை தொடரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.இதேவேளை, போர் நிறுத்த உடன்படிக்கையை செம்மையாகச் செயற்படுத்துவது குறித்தும் பேச்சு வார்த்தையை நடத்துவது குறித்தும் ஆராய்வதற்காக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் டொன்புறூவ்ஹாவ்டேஅடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கை வரு வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரும் இவர் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளை சந்தித்து உரையாடுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

## கனடாவில்...

வோட்டலூ நகரம் உள்ளதால் அவர் அங்கேயே தங்கிப் படித்து வருகின்றார்.

இளையவர் சௌமியன், பெற்றோருடன் தங்கி ரொரன்ரோவிலுள்ள சென்ரானியல் கல்லூரியில் கலைத்தொழில் நுட்பம் படித்து வருகிறார்.

சம்பவம் நடைபெற்ற நாளுக்கு முதல்நாள் (வியாழக்கிழமை) இரவு 7.30 மணியளவில் சௌமியன், தனது அண்ணனின் தோழரின் பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்றுக்காகப் பெற்றோரின் அனுமதி பெற்று வோட்டலூ சென்றிருக்கின்றார்.

பிறந்தநாள் முடிந்து வெளியே வந்தபோது நான்கு தமிழ்இளைஞர்கள் கொண்ட ஒரு வாகனம் நடந்து வந்துகொண்டிருந்த சந்திரசேகரை மோதியுள்ளது. நிலத்தில் வீழ்ந்த அண்ணனைத் தூக்க முயன்ற தம்பி சௌமியன் மீதும் மற்றொரு தோழர் மீதும் அந்த வாகனம் மீண்டும் வந்து மோதியுள்ளது.

சந்திரசேகர்,சௌமியன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டு விட்டனர். மற்றொரு நபர், நெஞ்சு மற்றும் இடுப்புப் பகுதியில் வாகனம் ஏறிய காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சகோதரர்கள் இருவருமே பெற்றோரைப் போல தமிழின உணர்வு மிக்கவர்கள்.

ரொரன்ரோவில் நடைபெற்ற 'பொங்குதமிழ்'நிகழ்வுக்குச் சந்திரசேகர்,வெகுஜன மக்கள் ஊடக இணைப் பாளராகப் பணியாற்றியவர். அத்தோடு கடந்த ஆண்டு வோட்டலூவில் நடைபெற்ற கலைநிகழ்வில் தமிழ் தேசியக் கொடி ஏற்றுவதைச் சில தடுக்க முயன்றனர்.இதனை இலாவமாகக் கையாண்டு நிகழ்வில் தேசியக் கொடியை ஏற்றச் செய்தவர் சந்திர சேகர்.

வோட்டலூ பகுதி தமிழ் இளையோர் அமைப்பின் அங்கத்தவராகச் சந்திரசேகர் செயற்பட்டு வந்தார்.

வோட்டலூ பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியத்தின் கலை, கலாச்சாரத்துறை ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வந்தவர்.

கடந்தாண்டு நடுப்பகுதியில் பெற்றோருடன் தமிழீழம் வந்திருந்த சந்திரசேகர், சௌமியன் ஆகியோர் வல்வெட்டித் துறையில் ஒரு ஆவணக்கண்காட்சியையும் நடத்தி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சம்பவம் குறித்து வோட்டலூ பகுதிப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர் தாயகம்...

மணிக்கு தருமபுரம் மகாவித்தியாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இந்நினைவு தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லூரில் காலையில் தியாகி திலீபனின் நினைவுத் தூபியில் இடம்பெறும் நிகழ்வுகளைத் தொடர்ந்து திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த நல்லூர் வடக்கு வீதியில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இங்கு பொதுச் சுடர் ஏற்றலைத் தொடர்ந்து தேசியக் கொடி ஏற்றப்பட்டு ஈகச் சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்தலும், மலரஞ்சலி நிகழ்வும் இடம்பெறுவதைத் தொடர்ந்து உண்ணாவிரத நிகழ்வு ஆரம்பமாகி நடைபெறும்.

இதேநேரம் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் கவியரங்கம், பேச்சுக்கள் மற்றும் பட்டிமன்றம் என்பனவும் இடம்பெறவுள்ளன. இன்றைய நிகழ்வில் பொது அமைப்புக்கள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், மகளிர் அமைப்பு உறுப்பினர்கள் உட்பட மற்றும் பல அமைப்புக்களும் கலந்து கொள்ளவுள்ளன. (சோ, 41, 33)

இப் பத்திரிகை ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.